The Vijaya Series.

Geography of the Pudukkottai State

INCLUDING

Civics and State History



BY

K. R. VENKATARAMAN,

Inspector of Schools, Pudukkottai State.

V. K. N. RAJAN & Co.,

BOOK-SELLERS AND PUBLISHERS,

Narasingampettai, (TANJORE District.)

 1929 **[Price 6 As.**

பொருளடக்கம்.

அத்தியாயம் 1.

புதுக்கோட்டை இராஜ்ய


பூகோளம்.

அத்தியாயம் 1.

பாடம் 1.

ஸூரியன்.

ஸூரியன் ஒரு பெரிய நெருப்புப் பந்து. நாம் வசிக்கும் பூமிபோன்ற உருண்டைகளில் பல லக்ஷம் உருண்டைகளைச் சேர்த்து ஒன்ருகத் திரட்டினுல் எவ்வளவு பெரிதாகுமோ அவ்வளவு பெரியது ஸூரியன். அது தினம் கிழக்கில் தோன்றி மேற்கில் மறைகிறது. ஸூரியன் உதிக்கும் காலத்தை 6 மணி என்கின்ருேம். அஸ்தமன காலத்தையும் 6 மணி என்கிருேம். காலையிலிருந்து நாழிகை ஆக ஆக ஸூரியன் உயரக் கிளம்புகிறது. நடுப்பகலில் நம்முடைய தலைக்கு நேரே காணப்படுகிறது. பிறகு நேரம் ஆக ஆக கீழே இறங்குகிறது. இவ்விதம் தினம் நடப்பதை கவனி.



உன் நோட் புஸ்தகத்தில் ஒரு அரைவட்டம் போடு. அதன் இரு நுனிகளிலும் '6' என்று எழுது. இந்த அரை வட்டத்தின் வளைவு கோட்டில் உள்ள நடுவைக் கண்டுபிடி. இதில் '12' என்று எழுது. வலது பக்கத்திலுள்ள '6'லிருந்து '12' வரையிலுள்ள வளைவு கோட்டின் பாகத்தை ஆறு சமபாகமாகப் பிரித்து முறையே 7, 8, 9, 10, 11 என்று எழுது. இதேமாதிரி இடது பக்கத்தில் உள்ள பாகத்தையும் செய். இது ஒருவகை கடிகாரம். சாதாரண கடிகாரத்தில் மணி காட்ட முள் ஏற்பட்டிருக்கிறது. நீ செய்திருக்கும் கடிகாரத்திற்கு ஸூரியனே முள். இந்த அரை வட்டத்தின் வளைவுபோல ஆகாயமும் இருப்பதை கவனி. ஆகாயத்தில் ஸூரியனிருக்கும் இடத்தை நிதானி. நீ செய்திருக்கும் கடிகாரத்தில் எந்த

எண்ணண்டை ஸூரிய னிருக்கிறது? அந்த எண்ணே அப்பொழுது உள்ள மணியாகும். ஸூரியனிருக்கும் இடத்தைக் கொண்டு மணியைக் குறி. கடிகாரத்தைப் பார்த்து நீ குறித்திருப்பது ஸரியா என்று பலதடவை பார்.

பாடம் 2.

ஸூரியனும் நிழலும்.

முன் பாடத்தில் நாம் ஸூரியனைக்கொண்டு மணிபார்க்கத் தெரிந்துகொண்டோம். இன்னொரு விதமாக மணி பார்க்க இப்பொழுது தெரிந்து கொள்வோம்.

ஸூரியோதயத்தில் வெளியில் புறப்பட்டால் நம்முடைய நிழல் வெகு நீளமாக ஸூரியனுக்கு எதிர்ப்பக்கத்தில் விழுந்திருப்பதைப் பார்க்கிறோம். இந்த நிழலை நன்ருய்க் கவனி. ஸூரியன் மேலே ஏற ஏற நம்முடைய நிழல் சிறியதாகிறது. ஸூரியன் உச்சியிலிருக்கும்பொழுது நிழல் வெகு சிறியதாக ஆய்விடுகிறது. பிறகு ஸூரியன் இறங்க இறங்க நம்முடைய நிழல் பெரியதாகிறது. அது காலையில் பார்த்தது போலவே அவ்வளவு பெரியதாக அஸ்தமான காலத்திலும் இருக்கிறது. ஆனல் இப்பொழுது நிழல் வேறு பக்கத்தில்

இருக்கிறது. நேரம் ஆக ஆக நம்முடைய நிழல் நடுப் பகல் வரையில் குறைந்தும் அதன்பின் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்தும் வருவதை நாம் பார்க்கிறோம். இந்த நிழலில் இருந்தும் நாம் நேரத்தைக் கண்டுபிடிக்கலாம். உன் நோட்டில் கீழே கண்ட விதமாக கட்டம் போட்டுக் கொள்.

	நிழலின் நீளம்						நிழல் விழும் திக்கு
தேதி							
காலை 8 மணி							
,, 9 ,,							
,, 10 ,,							
,, 11 ,,							
,, 12 ,,							
மாலை 1 ,,							
,, 2 ,,							
,, 3 ,,							
,, 4 ,,							

ஒருநாள் 8 மணிக்கு உன் நிழலை உன்காலால் அள. தேதியை உன் கட்டத்தின் தலைப்பில் அதற்கேற்பட்ட இடத்தில் குறித்துக்கொள். மணிக்கு நேரே நிழலின் அளவையும் குறி. இவ்விதம் கட்டத்தில்கண்ட ஒவ்வொரு மணிக்கும் செய். இப்படி 6 நாட்கள் செய். தினம் ஒரேவிதமாக இருக்கிறதா? இப்பொழுது நிழலின் நீளத்தைக்கொண்டு மணி

சொல்லலாம் அல்லவா? கடிகாரத்தின் உதவியில்லாமல் இரண்டு விதமாக மணி சொல்லத் தெரிந்து கொண்டோம். இந்த இரண்டு விதமாகவும் நேரத்தைக் கண்டு பிடித்துக் குறித்துக் கொண்டு கடிகாரப்படி ஸரியாயிருக்கிறதா என்று பல தடவை கவனி.

பாடம் 3.

ஸூரியன் ஒரே இடத்தில் தினம் உதிக்கவில்லை.

உன் பள்ளிக்கூடத்தில் ஸூரியன் நன்றாய்ப் பிரகாசிக்கும் இடத்தில் ஒரு கோலை செங்குத்தாக நடு. மாதா மாதம் ஒரு குறிப்பிட்ட தேதியில் 10-மணிக்கு அந்தக்கோலின் நிழல் எந்த திசையில் விழுந்திருக்கிறது என்று பார். இதிலிருந்து ஸூரியனிருக்கும் திக்கு எது என்று கண்டுபிடி. கண்டுபிடித்ததை கீழே கண்டபடி கட்டம்போட்டுக் குறி.

[திசையறி கருவியின் உதவியால் கோலை ஊன்றும் இடத்தில் திசைகளைக் குறித்து வைப்பது நல்லது.]

மாதமும் தேதியும்		நிழல் விழும் திக்கு	ஸூரியன் காணப்படும் திக்கு
இங்கிலீஷ்	தமிஷ்		

[ஸ்கூல் வருஷ முடிவில் மேற்கண்ட குறிப்புகளிலிருந்து கீழேகண்ட கேள்விகளுக்கு விடை எழுதவேண்டும்].

1. ஸூரியன் எப்பொழுது வடக்கே நகர ஆரம்பிக்கிறது?

2. எந்த மாதம்வரை வடக்கேயே நகர்ந்து போகிறது?

3 எப்பொழுது தெற்கே திரும்புகிறது?

4. எந்த மாதம்வரை தெற்கேயே போகிறது?

5 தக்ஷிணாயனம் உத்தராயணம் என்றால் என்ன?

6. தக்ஷிணாயன உத்தராயண மாதங்கள் எவை?

7. எந்த மாதங்களில் ஸூரியன் நமக்கு நேர் கிழக்கில் உதிக்கிறது?

பாடம் 4.

சந்திரன்.

பௌர்ணமிக்குப் பின்னும் அமாவாசைக்குப் பின்னும் சந்திரனைக் கவனித்து பின்கண்ட கட்டத்தில் கண்டிருக்கும் விஷயங்களை எழுது. இவ்விதம் போதுமான நாட்கள் குறித்தபின் கீழேகண்ட கேள்விகளுக்கு விடை எழுது.

திதி (நாள்)	சந்திரன் உதய மாகும் மணி	சந்திரன் அஸ்தமன மாகும் மணி	சந்திரன் படம்.

1. முதல் நாளைவிட மறுநாளில் எவ்வளவு நாழிக்குப் பிறகு சந்திரன் புறப்படுகிறது அல்லது அஸ்தமிக்கிறது?

2. எதுமுதல் சந்திரன் (பிறை) வரவர குறை (தேய்) கிறது? எதுமுதல் வளர்கிறது? தேய்பிறை, வளர்பிறை என்றால் என்ன?

3. சுக்கில பக்ஷம், கிருஷ்ண பக்ஷம் இவ்வார்த்தைகள் எதைக் குறிக்கின்றன? பக்ஷம் என்றால் எத்தனை நாள்? ஒரு மாதத்திற்கு எத்தனை பக்ஷங்கள்?

4. ஒரு பக்ஷத்தின் ஆரம்பத்திலிருந்து வரிசையாக முதல் நாள், இரண்டாம் நாள் என எழுதி அததன் எதிரில் அததற்கேற்பட்ட வடமொழி வார்த்தையை எழுது.

பாடம் 5.

ஸூரிய வெளிச்சமும், உஷ்ணமும்.

ஸூரியனிடமிருந்து வெளிச்சம் வருகிறது. வெளிச்சம் வராவிட்டால் நாம் உயிருடன் இருக்க முடியாது. புல் பூண்டுகளுக்கும் வெளிச்சம் வேண்டும். நிழலில் இருக்கும் செடிகள் வெளுத்துப் போவதையும் நன்றாய் வளராமல் இருப்பதையும் கவனி. வெளிச்சம் இருப்பதால் தான் நீ பள்ளிக் கூடம்போய் படிக்கிறாய்; குயவன் பானைகள் செய்கிறான்; தச்சன் நாற்காலி முதலியன செய்கிறான்; குடியானவர்கள் நிலத்தைப் பண்படுத்தி சாகுபடி செய்கிறார்கள். இருட்டில் இதெல்லாம செய்யமுடியுமா? இருட்டில் நாம் தூங்குகிறோம்.

உன் பள்ளிக்கூடத்தின் முற்றத்தில் உள்ள கல்லை காலையிலும் நடுப்பகலிலும் தொட்டுப் பார். நடுப்பகலில் உஷ்ணமா யிருப்பானேன்? ஸூரியனிடம் இருந்து வெளிச்சத்துடன் உஷ்ணமும் வருகிறதல்லவா? சில நாட்களில் உஷ்ணம் தாங்க முடியாம லிருக்கிறது. சில நாட்களில் அவ்வளவு உஷ்ணம் இல்லை. நமக்கும் புல் பூண்டு முதலிய தாவரங்களுக்கும் வெளிச்சத்தைப் போலவே உஷ்ணமும் அவசியம் வேண்டும். உன் பள்ளிக்கூடத்தில் உஷ்ணம் அளக்கும் கருவி யிருந்தால் அதைக் கொண்டு காலை 10 மணியிலும் நடுப்பகலிலும் மாலை 3 மணியிலும் உஷ்ணம் எவ்வளவு இருக்கிறதென எல்லா மாதங்களுக்கும் குறி.

ஸூரியன் உதயமாகும் காலம் 6 மணியென்று முந்தி சொன்னோம். ஆனால் தினமும் ஸூரியன் 6 மணிக்கே உதிப்பதில்லை. கீழே இருக்கும் கட்டத்தைக் கவனி. அதில் ஒவ்வொரு மாதத்திற்கும் ஸூரிய உதயகாலம், அஸ்தமன காலம், ஸராஸரி உஷ்ண அளவு, மழை அளவு, இவை குறிக்கப்பட்டிருக்கின்றன. ஸூரிய உதய காலமும் அஸ்தமன காலமும் ஸரியாவென கடிகாரத்தைப் பார்த்து சிலநாட்களில் கவனி. ஒவ்வொரு மாதத்திலும் பகல் நேரம் எவ்வளவு எனக் கணக்கிட்டுக் குறித்துக்கொள். இதற்கும் உஷ்ணத்

தின் அளவிற்கும் க்ராப்போட்டு ஒன்றுக்கொன்று ஒப்பிட்டுப் பார். பகல் நேரம் அதிகமாக ஆக ஆக உஷ்ணமும் அதிகமாகிற தல்லவா? ஏன்? பகல் நேரம் அதிகம் என்றால் ஸூரியன் ப்ரகாசிக்கும் காலம் அதிகம். ஆகையால் உஷ்ணமும் அதிகம். பகல் நேரம் குறையக்குறைய உஷ்ணம் குறைகிறதா? ஏன்?

மாதம்	முதல் தேதியில் ஸூரிய		ஸராஸரி	
	உதயநேரம்	அஸ்தமன நேரம்	உஷ்ணம்	மழை
ஜூலை	6·	6·36	90.3	3·99
ஆகஸ்டு	6·6	6·36	88·7	6·77
செப்டெம்பர்	6·8	6·22	87·0	3·83
அக்டோபர்	6·7	6·3	85.5	5·44
நவம்பர்	6·9	5·49	82.4	5 41
டிஸம்பர்	6·20	5·46	81.2	1·23
ஜனவரி	6·35	5·59	81 9	1 03
பிப்ரவரி	6·43	6·14	85.7	0·66
மார்ச்	6·34	6·21	89.4	0·44
ஏப்ரல்	6·16	6·22	92.7	1·60
மே	6·	6·24	94.1	2·26
ஜூன்	5·56	6·30	93·5	1·16

1. எந்த மாதத்தில் பகல் நேரம் அதிகம்? எந்த மாதத்தில் குறைவு?

2 எந்த மாதத்திலிருந்து எந்த மாதம்வரை பகல்நேரம் குறைகிறது? எந்த மாதத்திலிருந்து எந்த மாதம்வரை அது அதிகமாகிறது?

3. குளிர் மாதங்கள் எவை? உஷ்ண மாதங்கள் எவ்வ? அதி உஷ்ணமாதங்களுக்கும் ஸூரியன் நமக்கு நேர் கிழக்கில் உதிக்கும் மாதங்களுக்கும் சம்பந்த மிருக்கிறதா?

4. உனக்கு கோடைகால விடுமுறை எந்தெந்த மாதங்களில்? ஏன்?

பாடம் 6.

காற்று.

ஒரு வெறும் ஸீஸாவை எடு. அதில் ஒன்றும் இல்லை என்கிறோம். தண்ணீர் நிறைந்த ஒரு பாத்திரத்தில் அந்த ஸீஸாவை தலைகீழாக அமுக்கிப் பிறகு கொஞ்சம் சாய். இப்பொழுது ஸீஸாவிலிருந்து குமிழ் குமிழாகக் கிளம்புவது என்ன? இதுதான் வாயு. இது எங்கிருந்தது? ஸீஸாவிற்குள் இருந்ததல்லவா? வெறும் ஸீஸா என்று சொன்னபோதிலும் அதற்குள் வாயு நிறைந்து இருந்தது. ஆகையால் வாயு இல்லாத இடம் இல்லை.

விளக்கு எரியும்போது ஒரு சிறு நூல் அல்லது இறகை சிம்மினியின்மேல் பிடி. என்ன ஆகிறது? நூல்(இறகு)உயரக் கிளம்புகிறது. என்?

விளக்கு எரிவதால் சிம்னியிலுள்ள வாயு உஷ்ண மாகிறது. வாயு உஷ்ணத்தால் லேசாகி விட்டது. அதாவது உஷ்ணம் வாயுவின் அணுக்களைப் பிரித்து விடுகிறது. லேசான வஸ்துக்கள் மேலே கிளம்பும். உஷ்ணமடைந்த வாயு மேலே கிளம்பு கிறது. அப்பொழுது நூலையும் (இறகையும்) மேலே தூக்குகிறது.

ஸூரியனிடமிருந்து அதிக உஷ்ணம் வரு கிறதென முந்தியே தெரிந்து கொண்டிருக்கிறோம். அது பூமியின்மேல் வியாபித்துள்ள வாயுவை உஷ்ணப்படுத்துகிறது. சூடான வாயு லேசாகி மேலே கிளம்புகிறது. அப்பொழுது பக்கத்தி லுள்ள வாயு காலியாயிருக்கும் இந்த இடத்தை அடைகிறது. இவ்விதம், வாயுவிற்கு ஒரு ஓட்டம் ஏற்படுகிறது. ஓடும் வாயுவை காற்று என்று அழைக்கிறார்கள்.

காற்று அடிக்கிறதென நாம் எப்படித் தெரி ந்து கொள்ளலாம்? சில சமயங்களில் தூசிகள் பறக்கின்றன. இலைகள் முதலியன அசைகின் றன. மேகம் ஒரு பக்கத்திலிருந்து மற்றொருபக்கம் போவதைப் பார்க்கிறோம். இதெல்லாம் காற்றடிப் பதைக் காட்டுகிறதல்லவா?

காற்று எந்தப் பக்கத்திலிருந்து அடிக்கிறது என்பதை தெரிந்துகொள்ள ஒரு 'காற்றின் திசை

காட்டும் கருவி,' செய்து கொள்ள வேண்டும். ஒரு நீண்ட சதுரமாயுள்ள தகரத் துண்டை அம்பு போல் செய்து ஒரு தகரக் குழாயில் பற்றவைத்து அதை ஒரு குடைக்கம்பியில் சொருகு. அக் கம்பியை உயரமான ஒரு இடத்தில் கட்டிவிடு. கட்டிடங்கள், மரஞ் செடிகள் முதலியன காற்றைத் தடுக்காத இடமாக பார்த்துக் கட்டவேண்டும். தினம் கவனித்து காற்று எந்தப் பக்கத்திலிருந்து அடிக்கிறதெனக் குறி. ஒவ்வொரு மாதத்திலும் காற்று பொதுவாக எந்தப் பக்கத்திலிருந்து அடிக்கிறது எனக் குறித்துக்கொள்.

எந்தத் திக்கிலிருந்து காற்று அடிக்கிறதோ அந்தத் திக்கின் பெயராலேயே அதைக் குறிப்பிடுவது வழக்கம். வடமேற்குக் காற்று என்றால் காற்று வடமேற்குத் திக்கிலிருந்து அடிக்கிறது என்று அர்த்தம். தென்கிழக்குக் காற்று என்றால் என்ன? தெற்கிலிருந்து அடிக்கும் காற்றைத் தென்றல் என்கிறோம். வடக்கிலிருந்து அடிப்பதற்கு வடந்தை என்று பெயர். கீழ்காற்று, மேல்காற்று என்று எதைச் சொல்லலாம்.

பாடம் 7.

மழை.

ஈர வஸ்திரத்தைக் காய வைக்கிறோம். அப்பொழுது என்ன ஆகிறது? வஸ்திரத்திலுள்ள ஈரம் ஸூரிய உஷ்ணத்தால் ஆவியாகப் போய்விட வஸ்திரம் உலர்ந்து விடுகிறது. அடுப்பில் ஜலம் கொதிக்கும் பொழுது கவனி. நெருப்பால் முதலில் ஜலம் சூடாயிற்று. பிறகு தண்ணீர் கொதிக்க ஆரம்பித்தது. தண்ணீர் புகைபோல் மேலே கிளம்புகிறதைப் பார். அந்தப் புகையை உன் கற்பலகையில் பிடி. பலகை முழுதும் சிறுசிறு நீர்த் துளிகள் காணப்படுகின்றன. இதிலிருந்து புகை போல் மேலே கிளம்புவதெல்லாம் சிறிய நீர்த் துளிகள் என்று தெரிந்து கொள்ளுகிறோம். இதை நீராவியென்று சொல்லுவார்கள். இது கண்ணுக்குத் தெரியாது.

பூமியில் ஆறு, குளம், ஏரி, ஸமுத்திரம் முதலிய இடங்களில் ஏராளமாக தண்ணீர் தங்கியிருக்கிறது. இதன்மேல் ஸூரிய வெப்பம் தாக்குகிறது. தண்ணீர் சிறு துளிகளாகப் பிரிக்கப்பட்டு நீராவியாக மேலே செல்லுகிறது.

இந்த நீராவிக் கூட்டம் மேலே கிளம்புவானேன்? ஒரு சிறு கல்லையும் கொஞ்சம் பஞ்சையும்

கையில் எடுத்துக் கீழேபோடு. கல் சீக்கிரம் கீழே விழுவானேன்? பஞ்சு மெதுவாக அங்கும் இங்கும் பறந்து கீழே வருவானேன்? பூமி முழுதும் வாயு என்ற ஒரு வஸ்து வியாபித்து இருக்கிறது என்று முன் பாடத்தில் படித்தோம். இந்த வாயுவைவிட கல் அதிக கனமானது. ஆகையால்தான் கல் உடனே கீழே விழுந்து விட்டது. பஞ்சோ வாயுவைவிட அதிக கனமானதல்ல. அதனுல் தான் கீழேவிழ தாமதமாயிற்று. நீராவிக் கூட்டமும் வாயுவைவிட லேசானதால் மேலே கிளம்புகிறது.

மேலே போகப்போக அவ்வளவு உஷ்ணம் கிடையாது. அதனுல் ஸ்லேட்டில் பார்க்கப்பட்டது போல் இந்த ஆவிக்கூட்டம் கொஞ்சம் குளிர்ச்சி அடைந்து மேகமாக நம் கண்களுக்குத் தென்பட்டது. ஆகாயத்தில் காணப்படும் மேகமெல்லாம் இந்நீராவிக் கூட்டமே. இந்த மேகத்தின்மேல் அதிக குளிர் தாக்கினுல் பெரும் நீர்த்துளிகளாக மாறிவிடும். அப்பொழுது அவை வாயுவைவிட கனமாக ஆகிவிடுகிறபடியால் கல்லைப் போலவே கீழே விழுகின்றன. இதை நாம் மழை என்கிறோம்.

ஸமஸ்தானத்தில் பல இடங்களில் மழையை அளக்கிறார்கள். மழையை எப்படி அளக்கிறது? குடியானவர்கள் இன்று உழவு மழை பெய்தது

என்கிறார்கள். உழவு மழை என்றால் என்ன? பெய்த மழையால் பூமியில் கலப்பையின் கொழு முனை பதிந்து மண்ணைக் கிளறும்படி அவ்வளவு மழை பெய்தது என்று அர்த்தம். இது மழையின் அளவை சரியாகக் காட்டாது. இப்பொழுது மழையை அங்குலக் கணக்காக அளக்கிறார்கள். நடுமைதானத்தில் அடித் தட்டையாயுள்ள படி போன்ற ஒரு பாத்திரத்தை மழை பெய்யும் பொழுது வை. அதில் பெய்திருக்கும் மழையின் ஆழம் ஒரு அங்குலமானால் பெய்த மழையை ஒரு அங்குலம் என்கிறோம். இந்த அங்குலத்தை 100 ஸமபாகமாகப் பிரித்து ஒவ்வொரு பாகத்தையும் ஒரு ஸென்ட் எனக் கணக்கிடுகிறோம்.

1. ஒவ்வொரு மாதத்திலும் நமது சமஸ்தானத்தில் பெய்யும் மழையின் ஸராஸரி அளவை ஐந்தாம்பாடத்தில் காட்டியிருக்கிறது. அதைப்பார்த்து மழையின் அளவைக் காட்ட ஒரு கிராப் போடு.

2. மழை அதிகமாக உள்ள மாதம் எது? குறைவாக உள்ள மாதம் எது?

3. ஒரு அங்குலத்திற்குக் குறைந்த மழையுள்ள மாதங்கள் எவை?

4. ஜூன், ஜூலை மாதங்களில் பகல் நேரம் ஜாஸ்தியாயிருந்தும் உஷ்ணம் குறைவா யிருப்பானேன்?

அத்தியாயம் 2.

பாடம் 1.

திசை.

ஸூரியன் கிழக்கில் உதிக்கிற தென்றும் மேற்கில் அஸ்தமிக்கிற தென்றும் தெரியும். ஸூரியனைப்பார்த்து நின்றால் நம்முடைய இடது பக்கம் வடக்கு என்றும் வலது பக்கம் தெற்கு என்றும் கீழ் வகுப்புகளில் படித்து இருக்கிறோம். ஆகையால் ஸூரியனைக் கொண்டு நான்கு திசைகளையும் தெரிந்து கொள்ளலாம். ஆனால் இது பகலில்தான் முடியும்.

சில இரவுகளில் சந்திரனைக்கொண்டு திசைகளைத் தெரிந்து கொள்ளலாம். சந்திரன் இல்லாத இரவுகளில் என்ன செய்கிறது? ஆகாயத்தில் நாம் நக்ஷத்திரக் கூட்டங்களைப் பார்க்கிறோம். இக்கூட்டங்களில் 'சப்தரிஷிக் கூட்டம்' என்று ஒன்று இருக்கிறது. இதுவும் சில நாட்களில்தான் காணப்படும். இது வால்கரண்டி போன்ற வடிவம் உள்ளது. சற்றுவடக்கில் தோன்றும் இது, எழுநக்ஷத்திரங்கள் கூடியது. இவற்றில் இரண்டிற்கு 'துருவம் காட்டி,' என்று பெயர். இவைகளை உன்உபாத்தியாயரை ஆகாயத்தில் காட்டச்சொல்லித் தெரிந்து கொள். துருவம் காட்டி இரண்டையும் ஒரு கோட்டால் சேர்ப்பதாக நினைத்துக் கொள். அக்

கோட்டின் வழியே உன் எதிர்ப்பக்கத்தில் பார். அங்கே ஒரு நக்ஷத்திரம் தெரியும். இதற்கு துருவ நக்ஷத்திரம் என்று பெயர். இது எப்பொழுதும் வடக்கிலிருக்கிறது. சந்திரன் பிரகாசியாத காலத்தில் துருவநக்ஷத்திரத்தைக் கொண்டு திசைகளைத் தெரிந்துகொள்ளலாம். வானத்தில் மேகம் அதிகமானல் இது தெரியாது. இதை நம்புவதிலும் பிரயோஜனமில்லை.

'திசையறி கருவி' என்று ஒன்று இருக்கிறது. இது கடையில் சொற்ப விலைக்குக் கிடைக்கும். நீ ஒன்று வாங்கி வைத்துக்கொள். இதில் ஒரு ஊசி இருக்கிறது பார். இந்த ஊசி எப்பொழுதும் வடக்கு திசையையே காட்டும். இக்கருவியை நீ எந்தப் பக்கம் திருப்பினுலும் ஊசி வடக்கேயே திரும்புகிறது பார். ஸூரியன், சந்திரன், நக்ஷத்திரம் இவைகளை மறைத்த மேகம் இதை ஒன்றும் செய்யமுடியாது. திசைகளை எல்லாக் காலங்களிலும் அறிந்துகொள்ள இது ஒரு தகுந்த ஸாதனம் அல்லவா? நடு சமுத்திரங்களில் திசை தெரியாமல் விழிக்கும் மாலுமிகளுக்கு இது எவ்வளவு உபகாரமாக இருக்கிறது!

இந்த ஊசியின் அடியில் ஒரு அட்டைத் துண்டு இருப்பதைக் கவனி. அதில் திசைகளெல்லாம் குறித்திருக்கிறது.

வடக்கு என்று குறித்திருக்கிற திக்கில் ஊசி வந்துநிற்கும் வரை அதைத்திருப்பு. இப்பொழுது தான் அவ்வட்டையில் குறித்திருக்கிற திக்குகள் எல்லாம் ஸரியான திக்குகளைக் காட்டுகின்றன.

1. நீ திசையறி கருவியின் அட்டைபோல் ஒன்று போடு. அதில் வடக்கு, வடகிழக்கு, கிழக்கு, தென் கிழக்கு, தெற்கு, தென்மேற்கு, மேற்கு, வடமேற்கு, இவற்றைக் குறி.

[வடக்குக்கு 'வ', என்றும் வடகிழக்குக்கு 'வ. கி,' என்றும் குறி. இவ்வாறே மற்ற திக்குகளையும் குறித்தல் போது மானது]

2. உன் ஊரைக்காட்ட ஒரு புள்ளி போட்டு அதன் நான்கு திக்குகளிலும் உள்ள ஊர்களை புள்ளிகளால் காட்டிப் பெயர்களை எழுது. திசைகளை கோட்டால் காட்டி அவற்றின் பெயர்களையும் எழுது.

3. பள்ளிக்கூடமிருக்கும் இடத்திலிருந்து கோவிலிருக்கும் இடத்தை ஒரு கோட்டால் காட்டி ...க்கின் பெயரை எழுது. இவ்விதமே ஊரணியையும் காட்டு.


பாடம் 2.

ப்ளான்.

நீ படிக்கும் அறையின் நீளத்தை ... 'ஒரு அடி இருப்பதாக வைத்துக்கொள் ... ...ஊபாத்தி லத்தையும் அள. அது 10 அடி ... இதற்கு ஒரு படம் போடவேண்டு... ...லித் தெரி தகத்தில் 25 அடி நீளக்கோடும் 10 ...யும் ஒரு கோடும் போடமுடியுமா? இடம் போத... அக்

25 அடிக்கு பதிலாக ஒரு சிறுகோடு போடவேண்டும். அது 25 அடியைக் குறிக்கவேண்டும் 10 அடிக்கு ஒரு அங்குலம் வீதம் நீளத்தில் 2½ அங்குலமும் அகலத்தில் 1 அங்குலமும் உள்ள கோடுகளால் உன் அறை மாதிரி ஒன்று போடு. நாம் எடுத்துக்கொண்ட விகிதத்திற்கு ஸ்கேல் என்று பெயர்.

1. நீ போட்டப் ப்ளானின் ஸ்கேல் 5 அடிக்கு ஒரு அங்குலமாக வைத்துக் கொண்டால் நீள அகலம் என்ன ஆகும்?



ஸ்கேல் 10 அடி = 1 அங்.

2 ப்ளானின் ஸ்கேல் 20 அடிக்கு ஒரு அங்குலமானால் அப்பொழுது அறையின் நீள அகலம் என்ன?

3. ஸ்கேல் 15 அடிக்கு ஒரு அங்குலமாக 45 அடி நீளம் 22 [illegible] லம் உள்ள ஒரு அறைக்குப் ப்ளான் போடு.

பாடம் 3.

ஸ்கேலைக் கொண்டு விஷயங்கள் அறிதல்.

இந்தப் புஸ்தகத்திலுள்ள புதுக்கோட்டை தெரியா [illegible] ப் படத்தைப் பார். அதின் வடகிழக் வளவு உப [illegible] போல ஒன்றுபோட்டு வடக்கு திக்கைக் இந்த [illegible] றது. இதைக்கொண்டு மற்ற திக்கு துண்டு இ [illegible] சால்லி விடலாம். ஒவ்வொரு பக்கமும் லாம் கு [illegible]

என்ன திசை என்று சொல்லு. எப்பொழுதும் ஒரு படத்தின் தலைப்பக்கம் வடக்கு; அடிப்பக்கம் தெற்கு; வலது பக்கம் கிழக்கு; இடது பக்கம் மேற்கு. உன் நோட்டில் கீழே கண்டபடி செய்.

1. புதுக்கோட்டை இராஜ்ஜியபடம் எந்த ஸ்கேலில் எழுதியிருக்கிறது பார். மேற்குக் கோடியிலிருந்து கிழக்குக் கோடிவரை எத்தனை அங்குலம்? வடக்கிலிருந்து தெற்கு எத்தனை அங்குலம்? இவை எவ்வளவு மைல்களைக் குறிக்கின்றன?

2. புதுக்கோட்டையிலிருந்து கீரனூர், திருமயம், ஆலங்குடி, இவை எவ்வளவு தூரத்தில் இருக்கின்றனவென்றும், என்ன திக்கில் இருக்கின்றனவென்றும் படத்திலிருந்து கண்டுபிடித்து எழுது.

3. புதுக்கோட்டை சமஸ்தானத்தை அடுத்துள்ள ஜில்லாக்களையும் அவை யிருக்கும் திக்குகளையும் குறி.

4. எல்லைமட்டும் போட்டிருக்கும் சமஸ்தானப் படம் ஒன்று எடுத்துக்கொள். அதில் தாலூகா எல்லைகளைக்குறி. கூடுமானல் வர்ணக் குச்சியால் (Crayon) குளத்தூர் தாலூகாவை சிகப்பாகவும் ஆலங்குடி தாலுகாவை பச்சையாகவும் திருமயம் தாலூகாவை மஞ்சளாகவும் வர்ணம் கொடு வொரு தாலூகாவின் பிரதான பட்டணத்தையும் பட குறி.

5 சமஸ்தானத்தின் பிரதான நகரத்தையும் ட டையிலிருந்து கீரனூர், ஆலங்குடி திருமயம், இ குப் போகும் ரஸ்தாக்களையும் படத்தில் போடு.



புதுக்கோட்டை
ராஜ்யம்
ஸ்கேல் 1 அங்.= 8 மைல்
விஸ்தீரணம் 1179 ச. மைல்
ஆலங்குடி


திருச்சிறுப்பள்ளி ஜில்லா
ராமநாதபுரம் ஜில்லா
குடுமியாமலை
நாங்குப்பட்டி
கொன்னையூர்
திருக்குளம்பூர்
வில்லமங்கலம்
குறிப்புகள்
காடு
குளம்
மலை
இருப்புபாதை
தாலுக்கா எல்லை
ரோடு
நதி
78 30
10°
30'
15'
45'

7. புதுக்கோட்டையிலிருந்து திருச்சிராப்பள்ளி எந்த திக்கிலிருக்கிறது? இந்த ரஸ்தாவையும் படத்தில் போடு.

8. திருச்சிராப் பள்ளியிலிருந்து புதுக்கோட்டை மூலம் போகும் ரயில் பாதையை படத்தில் குறி. நம்முடைய சமஸ்தானத்திற்குள் இந்த ரயில் பாதையின் நீளம் என்ன? ஒவ்வொரு தாலூகாவிலும் இது போகும் நீளம் என்ன?

9. படத்தில் உன் கிராமம் இருக்கும் இடத்தை நிதானித்துக்குறி. உன் ஊருக்கும் உன் தாலூகாவின் பிரதான நகரத்திற்கும் உள்ள தூரம் எவ்வளவென கணக்கிட்டு எழுது.

10. படத்தில் ஆறுகளைக் குறி. ஒவ்வொரு தாலூகாவிலும் என்னென்ன ஆறுகள் போகிறதென நோட்டில் எழுது. திருமயத்திற்குப்போகும் ரஸ்தா வெள்ளாற்றைத் தாண்டுகிற இடத்தைப் பார். இது புதுக்கோட்டையிலிருந்து எந்த திக்கில் எத்தனை தூரத்தில் இருக்கிறது?

அத்தியாயம் 3.

பாடம் 1.

ஆகாரப் பொருள்கள்.

உன் ஊரில் சந்தையிருக்கிறதா? இல்லாவிட்டால் எல்லாரும் எந்த ஊர் சந்தைக்குப்போய் ஸாமான்கள் வாங்குகிறார்கள்? அவர் வாங்கி வரும் ஸாமான்களில் சில சொல்லு. இவற்றில்

நீ சாப்பிடக்கூடியவை எவை? உன் ஊரில் விளைபவை எவை?

நம்மில் சிலர் அரிசி சாப்பிடுகிறார்கள். சிலர் கேழ்வரகு சாப்பிடுகிறார்கள். நாம் இன்னும் என்ன என்ன தானியம் சாப்பிடுகிறோம்?



நெல் எங்கே விளைகிறது? நெல்வயலை பார்த்திருக்கிறாயா? நெல் விளையும் பூமிக்கு நன்செய் என்று பெயர். நன்செயில் விளையும் வேறு இரண்டு பயிர்கள் சொல்லு. புன்செய் என்று எதற்குப் பெயர்? புன்செய் தானியங்கள் சில சொல்லு. நன்செய்க்கு அதிகத் தண்ணீர் வேண்டும்; புன்செய்க்கு அவ்வளவு தண்ணீர் வேண்டியதில்லை. உன் ஊரில் நன்செய் நிலங்களுக்குத் தண்ணீர் எங்கிருந்து கிடைக்கிறது? கம்மாயிலிருந்து மதகின் வழியாக வய்லுக்கு தண்ணீர்போவதை கவனி. கம்

மாய்க்கு எந்தப்பக்கம் வயல்கள் இருக்கின்றன? தண்ணீர் மேட்டிலிருந்து பள்ளத்திற்கு ஓடுவதை நீ பார்த்திருப்பாய். வயல்கள் தண்ணீர் மட்டத்திற்கு கீழே இருக்கிறதா? மேலே இருக்கிறதா? வயல் மேடான இடத்தில் இருந்தால் வயலுக்குத் தண்ணீர் எப்படிப் பாயும்?

கிணற்றிலிருக்கும் நீரைத் தோட்டத்திற்கு எப்படிப் பாய்ச்சுகிறார்கள்? இவ்விதமாகத் தண்ணீர் இறைக்கும் கருவிகளில் சில சொல்லு. மண் எண்ணெயை உபயோகித்து யந்திரங்களால் தண்ணீர் இறைப்பதை நீ பார்த்திருக்கிறாயா? தோட்டப் பயிர் சில சொல்லு.

விராச்சிலைக் கருணைக் கிழங்கு பார்த்திருக்கிறாயா? செம்பாட்டூரில் வெற்றிலை அதிகம். வடகாட்டிலும் விராலி மலையிலும் மிளகாய் ஜாஸ்தி. கரம்பக்குடிப் பலாப்பழம் பெரியதாயும் ருசியாயுமிருக்கும். பொன்னமராவதி பக்கத்தில் உளுந்து விளைகிறது. சேந்தமங்கலம் ஒட்டு மாம்பழம் நீ சாப்பிட்டு இருப்பாய். கோட்டூர் கத்திரிக்காய் எனக் கேள்விப்பட்டிருக்கிறாயா?

மேலே சொன்னவைகளில் ஒவ்வொன்று ஒவ்வொரு ஊரில் பயிரிடப்படுகின்றன. அவை மற்ற ஊர்களில் உண்டாகாது என்பது இல்லை. வழக்கமாய்ச் செய்பவர்கள் ஒவ்வொரு பயிரை

விளைவிப்பதில் கைதேர்ந்து விடுகிறார்கள். கொடிக்கால் வெள்ளாழர்கள் என ஒரு ஜாதியார் உண்டு. இவர்கள் வெற்றிலைப்பயிர் செய்வதில் திறமை வாய்ந்தவர்கள். இவர்கள் குடியேறி இருக்கும் இடங்களில் எல்லாம் வெற்றிலை உண்டு. செம்பாட்டூர், அன்னவாசல், வயலோகம், நகரப்பட்டி, முதலிய இடங்களில் இவர்கள் வசிக்கிறார்கள். இந்த இடங்களில் எல்லாம் வெற்றிலைப்பயிர் செய்யப்படுகின்றன. இப்பொழுது முகமதியர்களும் வெற்றிலைப்பயிர் செய்கிறார்கள்.

1. இப்பாடத்தில் கண்ட இடங்களை உன் படத்தில் எழுதி அதன் பக்கத்தில் அங்கு விளையும் பொருள்களையும் எழுது.

2. உன் ஊரில் சாகுபடியாகும் ஏதாவது ஒரு பயிரைப் பற்றி விவரி.

பாடம் 2.

கம்மாய்.

முன்பாடத்தில் நமக்கு வேண்டிய ஆகாரப் பொருள்களைப் பற்றிப் படித்தோம். சிலவற்றிற்குத் தண்ணீர் அதிகம் வேண்டியிருந்தது. சிலவற்றிற்கு அவ்வளவு தண்ணீர் வேண்டியதில்லை. தண்ணீர் எங்கிருந்து வருகிறது? முந்தியே மழையின்மூலம் வருகிறதாகத் தெரிந்து

கொண்டோம். நமக்குத் தண்ணீர் வேண்டும்போதெல்லாம் மழை பெய்யுமா? மழை பெய்யும்பொழுது நாம் தண்ணீரைத் தேக்கி வைத்துக் கொண்டு நமக்கு வேண்டியபொழுது அதை உபயோகித்துக் கொள்ளவேண்டும் அல்லவா? இவ்விதமாகத் தண்ணீரைத் தேக்கி வைத்துக் கொள்ளும் இடத்திற்கு ஏந்தல் என்றும் கம்மாய் என்றும் சொல்லுகிறார்கள். இந்தக் கம்மாய்களுக்குத் தண்ணீர் வரும் மார்க்கத்தைக் கவனிப்போம்.

உன் ஊரில் மழை பெய்யும் பொழுது என்ன ஆகிறது. தண்ணீர் வழிந்து ஓடுகிறது. உன் வீட்டிலும் வீதியிலும் பெய்த மழைநீரெல்லாம் சேர்ந்து ஒரு வாய்க்காலை அடைகிறது. இதை வாரி என்று சொல்லுகிறார்கள். இந்த வாரியின் தண்ணீர் கடைசியாக எங்கே போகிறது பார். உன் ஊரிலுள்ள கம்மாயின் பெயர் என்ன? அதற்கு எத்தனை கரை யிருக்கிறது? எத்தனை மடைகள் இருக்கின்றன? மடை என்றால் என்ன ?

கம்மாய் நிறையத் தண்ணீர் தங்கியிருக்கும் பொழுது கரையின் எதிர்ப்பக்கத்தில் எவ்வளவு தூரம் நீர் பிடித்திருக்கிறது பார். நீர்ப்பிடி என்றால் என்ன? வயல்களுக்கு தண்ணீர் பாயப்பாய அது குறைகிறது. அப்பொழுது நீர்ப்பிடியில் கத்

திரி போடுகிறார்கள். உன் ஊரில் அப்படிச் செய்கிறார்களா? உன் ஊர் கம்மாயைப் படத்தில் போடு.

கம்மாய்க்குத் தண்ணீர் வருகிறவழியைக் கவனி. இதற்கு வரத்து என்று பெயர். இந்தக் கம்மாயில் தண்ணீரை அதிகமாய் விட்டால் என்ன ஆகும்? கரை உடைந்து போனால் வயல்களில் தண்ணீர் போய்ப் பயிரைக் கெடுத்துவிடும். வயல்களில் மண் நிறைந்து சாகுபடிக்கு லாயக்கில்லாமல் செய்துவிடும். இப்படி மண் அடிப்பதற்கு எக்கல் அடித்தல் என்று சொல்லுவார்கள். இவ்விதம் நேருவது கெடுதல் அல்லவா? ஆகையால் கம்மாயில் அதிக தண்ணீர் தங்காமல் செய்ய வேண்டும். கம்மாயை நன்றாய் கவனி. அதிகத் தண்ணீர் ஒரு மூலையில் வெளிப்படுகிறதைப் பார். இதை கடை போகிறது என்பார்கள். எப்பொழுது கம்மாயில் கடைபோகும்? உன் ஊர் கம்மாயில் கடைபோகும் இடத்தில் ஏதாவது கட்டிடம் கட்டி இருக்கிறார்களா? இதற்கு கலிங்கல் என்று பெயர். ஒவ்வொரு கம்மாயும் எவ்வளவு தண்ணீர் கொள்ளும் என்று அரசாங்கத்தார் கணக்கிட்டிருக்கிறார்கள். அதற்கு மேல் தண்ணீர்வந்தால் கரைக்கு ஆபத்து நேரும். ஆகையால் ஜாஸ்தித் தண்ணீர் தங்காமல் வெளியே போய்விட ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இது கம்மாய்க்கு நல்லதல்லவா? தண்

ணீர் கலிங்கலில் போகும்பொழுது பார். எங்கே போகிறது? இன்னொரு கம்மாயை அடைகிறதா? அப்படியானல் அந்த கம்மாயின் பெயர் என்ன? ஆற்றில் விழுந்தால் எங்கே, எந்த ஆற்றில் விழுகிறது?

1. உன் ஊர் கம்மாயைப்போல் ஒருபடம் எழுதி, அதில் கலிங்கல், நீர்ப்பிடி, வரத்து இவைகளைக் குறி.

பாடம் 3.

நதிகளும் அணைக்கட்டுகளும்.

கம்மாய்களிலிருந்து தண்ணீரை வயல்களுக்கு எவ்விதம் கொண்டு போகிறார்களென்று கவனித்தோம். கம்மாய்களுக்கு மழை பெய்வதின் மூலம் தண்ணீர் வருகிறதெனச் சொல்லப்பட்டது. கம்மாயின் வரத்து உள்ள இடத்தில் மழை பெய்தால் ஒழிய கம்மாய்க்குத் தண்ணீர் வராதல்லவா? அவ்விதம் பெய்யாவிட்டால் பயிர்த்தொழில் நடப்பதே கடினமாகும். ஆகையினல் கம்மாய்களுக்கு அந்தந்த இடத்தில் பெய்யும் மழைத் தண்ணீரை மட்டும் நம்பியிருப்பதில் பிரயோஜனமில்லை.

படத்தைப் பார். நம்முடைய ராஜ்யத்தில் நதிகள் ஓடுவதை கவனி. நம்முடைய நதிகள் நீளமானவைகள் அல்ல. மழைபெய்த சில தினங்கள்

மட்டிலும் தான் அவற்றில் தண்ணீர் இருக்கும். ஆகையால் இந்த ஆறுகளால் நம்முடைய பயிர்த் தொழிலுக்கு அதிக உபயோகம் இல்லை. இந்த ஆறுகளில் போகும் தண்ணீர் வீணாக ஓடி சமுத்திரத்தைப் போய்ச் சேராமல் நாம் பார்த்துக்கொள்ள வேண்டுமல்லவா?

மழை பெய்து நின்றபின் உன் தெருவின் நடுவில் தண்ணீர் கொஞ்சமாக ஓடுவதை நீ பார்த்திருப்பாய். ஒருக்கால் விளையாட்டாக நீ அந்த தண்ணீர் ஓட்டத்தைக் காலால் தேக்கியிருப்பாய். அவ்விதம் தேக்கினபொழுது முதலில் ஓட்டம் தடைப்பட்டது. பிறகு மேலே தண்ணீர் வரவர, அதன் மட்டம் உயர்ந்தது. அதன்பின் உன் பாதத்தைச் சுற்றிப் பக்கத்தில் தண்ணீர் வழிந்தோட ஆரம்பித்தது அல்லவா?

நம்முடைய நதிகள் பள்ளத்தில் ஓடுகின்றன. மேடாயுள்ள பக்க நிலங்களுக்கு உபயோகமில்லாமற் போகிறது. ஆகையால் ஆற்றின் குறுக்கே செங்கல் சுண்ணாம்புகொண்டு ஒரு சிறிய சுவரை நம் அரசாங்கத்தார் எழுப்பியிருக்கிறார்கள். இதற்கு அணைக்கட்டு என்று பெயர். நீ காலால் தண்ணீரைத் தேக்கியதுபோல் இந்த சுவர் தண்ணீரைத் தேக்குகிறது. முந்தி பார்த்தது போலவே தண்ணீர் மட்டமும் உயர்கிறது. ஆற்றின்பக்கத்தில்

கால்வாய் வெட்டித் தண்ணீரைக் கம்மாய்களுக்கு கொண்டுபோய் விடலாமல்லவா? வீணாக ஆற்று டன் போகும் தண்ணீர் இப்பொழுது நமக்கு உபயோகமாய்விடுகிறது.

1. உன் படத்தில் நம்முடைய இராஜ்யத்தில ஓடும் நதிகளைப் பெயருடன் எழுது.

2. ஒவ்வொரு நதியும் சமஸ்தானத்திற்குள் எவ்வளவு நீளம் இருக்கிறதென்பதை அளந்து குறிப்பிடு.

3. எந்த நதி அதிக நீளமானது?

4. நதிகள் ஓடும் திசையைக் கொண்டு புதுக்கோட்டை ஸமஸ்தானம் எந்தப் பக்கம் மேடு, எந்தப் பக்கம் பள்ளம் என்று நிதானித்துக் குறி.

பாடம் 4.

அணைக்கட்டுகள்.

அணைக்கட்டுகளையும் அவற்றால் நமக்குண்டாகும் நன்மைகளையும் பற்றிப் படித்தோம். நம்முடைய சமஸ்தானத்தில் அவ்வித அணைகள் எங்கே இருக்கின்றன? முதலில் வெள்ளாற்றைக் கவனி. இது சமஸ்தானத்தின் மேற்கே உற்பத்தியாகி சமஸ்தானம் முழுவதும் அனேகமாக தென்கிழக்காக ஓடுகிறது. நம்முடைய ஆறுகளில் இதுவே பெரிதெனப் படித்தோம். குடுமியாமலை

எங்கிருக்கிறதுபார். அதன் பக்கத்தில் வெள்ளாறு போகிறது அல்லவா? இந்த இடத்தில் ஒரு அணை கட்டப்பட்டிருக்கிறது. இதற்கு விசலூர் அணைக் கட்டு என்று பெயர். இங்கிருந்து விசலூர் கம் மாய்க்குத் தண்ணீர் கொண்டுபோகப் படுவதால் இதற்கு விசலூர் அணைக்கட்டு என்றுபெயர். இந்த இடத்தில் இந்த அணைக்கட்டைக் காட்டுவதற்காக உன் படத்தில் ஆற்றின் குறுக்கில் இந்த || அடையாளம் போடு. அதன் பக்கத்தில் விசலூர் அணைக் கட்டு என்று எழுது. சமீபத்தில் வயலோகம் என்ற ஊர் இருப்பதைப் பார். அங்கே இருக்கும் கம்மாய்க்கு விசலூர் கம்மாயின் கடைத்தண்ணீர் கால்வாய்மூலம் கொண்டுவரப்படுகிறது. இந்த கால்வாயை ஒரு கோட்டால் காண்பி. இக்கால்வாய் குடுமியாமலைக்குப்போகும் ரஸ்தாவை கடந்து செல்லுகிறது பார். நீ இந்தவழியாகப் போயிருந் தால் இக்கால்வாய்க்குக் கட்டியிருக்கும் பாலத்தை யும் பார்த்திருப்பாய். பக்கத்தில் மாங்குடி என்ற ஊரைப்பார். அதிலும் ஒரு கம்மாய் இருக்கிற தல்லவா? வயலோகம் கம்மாய் நிறைந்து கடை போனால் அந்தத் தண்ணீர் மாங்குடிக் கம்மாயை அடையும். இதை உன் படத்தில் காட்டு.

பொன்னமராவதி போகும் சாலை வெள்ளாற் றைத் தாண்டும் இடத்தைக் கவனி. அந்த இடத்

திற்கு சற்று கீழே ஒரு அணைக்கட்டு இருக்கிறது. இதனின்றும் சுந்தரப்பட்டிக்கம்மாய்க்குத் தண்ணீர் வருகிறது. சேந்தமங்கலம் இருக்கும் இடத்தைப் பார். அங்கிருக்கும் அணைக்கட்டிலிருந்து கவிநாட்டுக் கம்மாய்க்குத் தண்ணீர் வருகிறது. கடையக்குடி அணையிலிருந்து வலநாட்டுக் கம்மாய்க்குத் தண்ணீர் கொண்டுவரப்படுகிறது. இதர ஆறுகளிலும் சில இடங்களில் அணைகள் கட்டியிருக்கிறார்கள். புதுக்கோட்டையிலிருந்து ஆலங்குடிக்குப்போகும் ரஸ்தா அம்புலியாற்றைக் கடக்கும் இடத்தில் அம்புலியாற்றில் கட்டியிருக்கும் அணையைக் கவனி. அதனின்றும் எந்தக் கம்மாய்க்குத் தண்ணீர் கொண்டுவரப்படுகிறது? பல இடங்களில் மண் அணைகளும் உண்டு.

(1000 வருஷங்களுக்குமுன் காராளர் என்ற ஜாதியார் நம்முடைய சமஸ்தானத்தில் குடியேறினார்கள். குடுமியாமலை, சுந்தரப்பட்டி, சேந்தமங்கலம் இந்த இடங்களில் வெள்ளாற்றுக்கு அவர்கள் அணைகள் கட்டியிருக்கிறார்கள். அவை இப்பொழுது புதுப்பிக்கப்பட்டிருக்கின்றன.)

1. உன் ஊர்ப் பக்கத்தில் ஏதாவது ஆறுகள் உண்டா? இருந்தால் ஏதாவது அணைக்கட்டு இருக்கிறதா?

2. மேலேகண்ட அணைக்கட்டுகளைப் படத்தில் குறித்து அதனால் பலனை அடையும் கம்மாயையும் காட்டு.

பாடம் 5.

பயிர்த் தொழில்.

ஆகாரப் பொருள்களை உண்டாக்கத் தண்ணீர் மட்டிலும் போதுமா ? நல்ல நிலமாய் இருந்தால் தானே பயிர் செழிப்பாய் வளரும். நல்ல நிலமாக ஆக்க காலத்தில் உழுகிறோம். எரு போடுகிறோம். இவ்விதம் செய்வதற்கு நிலத்தை பண்டுத்தல் என்று பெயர். 'அகல உழுவதை ஆழ உழு' என்னும் பழமொழியின் கருத்து என்ன? உன் ஊரில் என்ன எருக்கள் உபயோகிக்கிறார்கள் ? புண்ணாக்கு, எலும்புத்தூள், மீன்எரு இதில் ஏதாவது உங்கள் ஊரில் உபயோகப்படுகிறதா ?

வீட்டுக் கொல்லைகளில் உள்ள குப்பை எருவை வண்டிக்காரர்கள் வந்து எடுத்துப் போவதை உங்களில் புதுக்கோட்டையில் இருப்பவர்கள் பார்த்திருப்பீர்கள். அந்த வண்டிக்காரர்களை நீங்கள் யார் என்று கேட்டதுண்டா? அவர்கள் நத்தம் பாடிகள். [நத்தத்தில் (பூமியில்) பாடுபடுபவர்கள் நத்தம்பாடிகள்.] உடையார் என்ற பட்டப்பெயர் உள்ளவர்கள். இவர்கள் வீடு வீடாய்ச் செ... மொட்டை வண்டிகளில் எரு ஏற்றிச் செ... கிறார்கள். இவர்களுக்கு விவசாயத்... ஊக்கத்தைப் பாருங்கள். இவர்களைப்போற்...

...த்

ஜாதியார்களும் நிலத்தில் பாடுபடுவார்களானல் அவர்களும் தங்களுடைய நிலைமையை எவ்வளவு மேன்மையுள்ளதாக ஆக்கிக் கொள்ளலாம்.

மழைபெய்த உடனே நிலத்தை உழுகிருர்கள். அப்படிச் செய்தால்தான் உழுவது சுலபமாகும். மேலும் நிலத்தில் சார்ந்த தண்ணீர் சீக்கிரம் ஆவியாகப் போவதை உழுவது தடுத்துவிடும். 9-ம் பக்கத்தில் உள்ள மழை யளவைப் பார்த்து எந்த மாதத்தில் மழை ஆரம்பிக்கிறது என்பதைக் கவனி. உன் ஊரில் அந்த மாதத்தில் உழுகிருர்களா ?

முதலில் கொஞ்சம் இடத்தைப் பண்படுத்தி அதில் விதைக்கிருர்கள். அந்த இடத்திற்கு நாற்றங்கால் என்று பெயர். பயிர் கொஞ்சம் வளர்ந்தவுடன் அதை நாற்று என்று சொல்லுகிருர்கள். நாற்றுப் பிடுங்குவதை நீ பார்த்திருப்பாய். ஒருக்கால் உனக்கே நாற்றுப் பிடுங்கத் தெரியும். இது எந்த மாதம் நடக்கிறது? இந்தக் காலத்தில் உன் பள்ளிக்கூடத்தை சாத்துகிருர்களா? ஏன் சாத்துகிருர்கள்? நாற்று நடுவதற்குமுன் நிலத்தைச் இருந்த்கி இலை தழைகளை வயலில் போடுவதை
2. மே ருப்பாய். இத்தழைகளுக்குப் பசும்தா
அதனல் பல று பெயர். உன் ஊரில் எந்த எந்த தழை
வாக உபயோகிக்கிருர்கள்? இந்த தழை

கள் எங்கிருந்து கிடைக்கின்றன? உன் ஊருக்குச் சமீபத்தில் காடுகள் உண்டா? காட்டில் இருந்து என்ன தழைகள் கொண்டு வருகிறார்கள்?

மழைப் படத்தைப்பார்த்து நடவு நடக்கும் காலம் முதல் எந்தமாதம் வரை மழைகாலமாகவே இருக்கிறது எனப் பார். மழை எந்த மாதத்தில் மிகக்குறைவு? அப்பொழுது பயிர்களெல்லாம் கதிர்விட்டு முற்றியிருக்கிறது. ஆகையால் இப் பொழுது பயிர்களை அறுத்து தானியங்களை சேர்க்கிறார்கள். இதை அறுவடை காலம் என்கிறோம். அப்பொழுது உன் பள்ளிக்கூடத்தை சாத்துகிறார்களா?

நம் ஸமஸ்தானத்தில் நிலையான நீர் ஆதாரமில்லை. காலா காலத்தில் மழை பெய்தால் தானே சாகுபடி யெல்லாம் ஸரியாக நடக்கும். இல்லாவிடில் நடவுகாலம், அறுவடைகாலம், இவை யெல்லாம் மாறும் அல்லவா? நம்முடைய பயிர்த் தொழிலுக்கு நாம் வானத்தை (மழையை) பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஆகையால் இதற்கு வானம்பார்த்த சீமை என்று சொல்லுகிறோம்.

பாடம் 6.

இதர தொழில்கள்.

நமக்கு முக்கியமான தொழில் விவசாயம். ஆயினும் வருஷம் முழுவதும் நமக்கு விவசாயத்தில் வேலை இல்லை. மழை பெய்தவுடன் உழுகிறோம்; விதைக்கிறோம்; நாற்றுப் பிடுங்குகிறோம்; களை பிடுங்குகிறோம்; பயிர் முற்றியபின் அறுக்கிறோம்; நடுவில் சில சமயங்களில் தண்ணீர் பாய்ச்சுகிறோம்; எரு போடுவதில் சிலகாலம் செலவு செய்கிறோம். மற்ற நேரங்களில் நாம் வீணாகத் தானே காலங்கழிக்கிறோம்.

நாம் அநேகமாக ஏழைகள். நம்முடைய வருமானத்தை அதிகப்படுத்திக் கொண்டால் ஒழிய நாம் கஷ்டமில்லாமல் ஜீவிக்கமுடியாது. எந்தெந்த விதத்தில் நம்முடைய வருமானத்தைப் பெருக்கிக்கொள்ளலாம் என்று கவனிப்போம்.

நம்முடைய ஸமஸ்தானத்தை வானம்பார்த்த சீமை என்று படித்தோம். முழுவதும் மழையை நம்பிக்கொண்டு நாம் இருப்பதில் பிரயோஜனம் இல்லை. அநேகர் கிணறுகள் வெட்டுகிறார்கள். தோட்டப்பயிர்கள் விளைவிக்கிறார்கள். சாக்கு சாக்காக கத்தரிக்காய், மூட்டை மூட்டையாக மிளகாய், கூடைகூடையாக கொத்தவரக்காய் மற்றும் இதர காய்கறிகள் சந்தையில் கொணர்ந்து விற்கப்படு

வதை நீங்கள் பார்க்கிறீர்கள். இப்பயிர்களை விளைவிப்பதால் நாம் நம் வருமானத்தை அதிகப்படுத்திக்கொள்ளலாம் அல்லவா?

விராலிமலைப் பக்கங்களில் சிலர் மீன்குஞ்சுகளைப் பிடித்து அவரவர்கள் கிணறுகளில் விட்டு வளர்க்கிறார்கள். பெரிதானபின் அவற்றை விற்கிறார்கள். இதுவும் ஒரு லாபகரமான வழிதானே.

வைத்தூரில் வளைவிச் செட்டிமார்கள் என்று ஒரு ஜாதியார் உண்டு. இவர்கள் வளையல் செய்வதில் கைதேர்ந்தவர்கள். இந்த வளையல்களை சவுட்டுமண் என்கிற ஒருவித வெண்மையான மண்ணிலிருந்து செய்து வந்தார்கள். வெளி ஊர்களில் இருந்து பலவிதமான நேர்த்தியான வளையல்கள் இப்பொழுது விற்கப்படுவதால் இவர்கள் செய்யும் வளையல்களை ஒருவரும் வாங்குவதில்லை. ஆகையால் இவர்கள் இப்பொழுது வளையல் செய்யும் தொழிலை நிறுத்திவிட்டார்கள். ஆனாலும் இவர்களில் அநேகர் தஞ்சாவூர், கும்பகோணம் முதலிய ஊர்களுக்குச் சென்று அங்கே இருக்கும் மொத்த வியாபாரிகளிடம், இப்பொழுது வழங்கும் புதிய மாதிரியான வளையல்களை வாங்கி வருகிறார்கள். திருநாட்கள் நடக்கும் இடங்களுக்கும் இதர ஊர்களுக்கும் இவைகளை எடுத்துச்சென்று வியாபாரம் செய்து இவர்கள் ஜீவிக்கிறார்கள்.

இன்னும் சிலர் இந்த சவுட்டுமண்ணைக் கொண்டுவந்து ஆழமாக வெட்டிய பள்ளங்களில் தண்ணீரை ஊற்றி அதில் இந்த மண்ணைக் கரைத்து மண் முதலியன தங்கியபின் அத்தண்ணீரைக் காய்ச்சி உலரவைத்து வண்டி வண்டியாக அயல் ஊர்களுக்குக் கொண்டுபோய் வியாபாரம் செய்கிறார்கள். இந்த சவுட்டுமண் பட்டுச்சாயம் போடுவதற்கும் அழுக்கு வஸ்திரங்களை வெளுப்பதற்கும் உபயோகப்படுவதால் வெளியூர்களில் இதற்கு கிராக்கியுண்டு.

கோழிவளர்ப்பது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். இதைவளர்த்து முட்டைகள், கோழிக்குஞ்சுகள், இவைகளைக்கொண்டுவந்து சந்தைகளில் வியாபாரம்செய்து, தங்கள் வருமானத்தை சிலர் அதிகமாக்கிக்கொள்ளுகிறார்கள். நார்த்தாமலை உற்சவத்தின்பொழுது அபிவிர்த்தி இலாகா அதிகாரிகளால் நடத்தப்பட்ட கண்காக்ஷியில் ஒரு சீமைக் கோழி வந்திருந்ததை உங்களில் சிலர் பார்த்திருக்கலாம். இது நாட்டுக்கோழியைவிட மூன்று நான்கு பங்குகள் அதிகமாக முட்டையிடுகிறது. முட்டைகளும் அதிக கனமானவை. ஆனால் இக் கோழிக்கு அடைகாக்கத் தெரியாது. நாட்டுக் கோழியிடம் வைத்துத்தான் அடைகாக்கச் செய்ய வேண்டும். இந்தக் கோழியை வளர்ப்பது வெகு லாபகரமானதல்லவா ?

முற்காலத்தில் ஒவ்வொரு குடும்பத்திலும் நூல் நூற்கத் தெரியாதவர்கள் இல்லை. பல வீடுகளில் பழைய கைராட்டினம் இருக்கிறது. ஆனால் அதை உபயோகிப்பதில்லை. யந்திரத்தால் நூற்கப்படும் நூல் வந்தபின் நாம் இந்தத்தொழிலை முழுவதும் மறந்துவிட்டோம். காலத்தை வீணுக்கும் நேரங்களில் நாம் நூல் நூற்பதாலும் நம் வரும்படியை ஜாஸ்தியாக்கிக் கொள்ளலாம்.

இவைதவிர ஆலவயல் முதலிய இடங்களில் ஈச்சம்பாய்கள் பின்னுகிறார்கள். விராச்சிலைமுதலிய செட்டிநாடுகளில் வர்ணஓலைப்பெட்டிகள் செய்கிறார்கள். பல ஊர்களில் கற்றாழை நாரினால் கயிறு முதலியன செய்கிறார்கள். இவைகளை ஒழிந்த நேரங்களில் ஒழுங்காகச் செய்வதால் நாம் நல்ல பலனை அடையக்கூடும்.

பாடம் 7.

ஓய்வுகாலம்.

நம்மவர்கள் பயிர்த்தொழில் செய்கிறார்கள். அறுவடையான பின் தானியங்களை களஞ்சியத்தில் கொண்டுவந்து சேர்க்கிறார்கள். திரும்பவும் மழை பெய்யும்வரை அவர்கள் என்ன செய்வது? நமக்கு விடுமுறை காலம் ஏற்பட்டிருப்பதுபோல் பயிர்த் தொழில் செய்பவர்களுக்கும் இது ஒரு விடு

முறை காலம். இந்தக் காலத்தில் என்ன செய்யப் படுகிறது என்பதைக் கவனிப்போம்.

புதிதாக விளைந்த தானியத்தைப் புதிய பாண்டங்களில் பொங்கிக்கொண்டாடுகிறோம். இக் கொண்டாட்டத்தின் பெயர் என்ன? இப்பொழுது தான் கலியாணம் முதலியன செய்வதற்கு நமக்கு ஒழிந்த காலம். உன் வீட்டில் சமீபத்தில் கல்யாணம் நடந்ததா? எந்த மாதத்தில் நடந்தது? இப்பொழுதுதான் கோயில்களில் திருநாள் நடத்துகிறோம். உன் ஊர் திருநாள் எப்பொழுது? நார்த்தாமலை, கொன்னையூர், திருக்கோகர்ணம் இவ்விடங்களில் உற்சவங்கள் எப்பொழுது?

நமக்கு சாப்பாட்டுக்குப் போதுமான தானியத்தை வைத்துக் கொள்ளுகிறோம். மீதியை சந்தையில் கொண்டுபோய் விற்று விடுகிறோம். முந்தி சந்தையில் வாங்கும் ஸாமான்களை தெரிந்து கொண்டோம். உன் ஊரிலிருந்து சந்தைக்கு விற்கக்கொண்டுபோகிற சில ஸாமான்கள் சொல்லு. ஒவ்வொரு தாலூகாவின் முக்கிய பட்டணத்திலும் வார சந்தை கூடுகிறது. புதுக்கோட்டையில் கூடுகிற சந்தை மிகப் பெரியது. கொன்னையூர், பொன்னமராவதி, விராலிமலை, கரம்பக்குடி முதலிய இடங்களிலும் சந்தைகள் உண்டு.

1. சந்தை கூடுகிற இடங்களைப் படத்தில் குறித்து பக்கத்தில் 'ச' என்று எழுது.

2. பெரிய கோவில்கள் உள்ள ஊர்களைப் படத்தில் குறி. அதன் பக்கத்தில் "கோ," என்று எழுது.

பாடம் 8.

சாலைகள்.

நாம் விளைந்த தானியங்களை வீட்டுக்குக் கொண்டுவரவேண்டும். சந்தைக்குக் கொண்டு போகவேண்டும். திருநாள்களுக்கு கோவில்களுக்குப் போகவேண்டும். கல்யாணங்களுக்கு ஊர்களுக்குப் போகவேண்டும். இவற்றை யெல்லாம் நாம் கஷ்டம் இல்லாமல் செய்ய சாலைகள் அவசியமல்லவா?

துரைத்தனத்தார் மராமத்து இலாகா என்று ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இவர்கள் வேண்டிய இடங்களுக்குப் புதிதாக சாலைகள் அமைக்கிறார்கள். ஏற்பட்டிருக்கும் சாலைகளை சரியான நிலைமையில் வைக்கிறார்கள். இவ்விதம் போடப்பட்டிருக்கும் சாலைகளை படத்தில் கவனி. இந்த சாலைகள் ஆறுகளைத் தாண்டும் இடங்களைப் பார். அவ்விடங்களில் இவர்கள் பாலங்கள் கட்டியிருக்கிறார்கள்.

1. இந்தச் சாலைகளை உன் படத்தில் போடு.

2. இரும்புப்பாலங்கள் கட்டியிருக்கும் இடங்களைப் படத்தில் காட்டு.

3. வேறு எவ்விதம் பாலங்கள் கட்டுகிருர்கள்? அவ்விதம்கட்டியிருக்கும் பாலங்களில் இரண்டு குறி.

அத்தியாயம் 4.

இதர தேவைகள்.

பாடம் 1.

ஆடை.

இதுவரை ஆகாரத்திற்கு வேண்டியதை மட்டும் கவனித்தோம். சாப்பாடு இருந்தால் மட்டும் போதுமானதா? உண்ண உணவும் உடுக்கத் துணியும் என்பார்கள். ஆகையால் உடுக்கத் துணி அவசியமல்லவா ? நீ கட்டிக்கொண்டிருக்கும் துணி, சட்டை இவை எங்கிருந்து வருகிறது தெரியுமா? அநேகமாக வெளி நாடுகளிலிருந்து வருகிறது. கரம்பக்குடித் துண்டுகள் எனக் கேழ்விப்பட்டிருக்கிருயா? திருவப்பூரில் நெய்யப்படும் பட்டு சேலைகளைப் பார்த்திருக்கிருயா ? திருவப்பூர் சாய வேஷ்டி நீ கட்டியிருக்கிருயா?

அநேகமாக நம் ஆடைகள் பருத்தி நூலால் ஆனவை. நாரினுல் செய்த ஆடைகளை நீங்கள் பார்த்திருக்க மாட்டீர்கள். ஆனுல் பட்டாடைகளையும், கம்பள உடைகளையும் பார்த்திருப்பீர்கள்.

i. நூல்நெசவு.

பருத்தி நம்மூரில் அதிகமாக கிடையாது. விராலிமலைப் பக்கத்தில் கொஞ்சம் சாகுபடி செய்கிருர்கள். இது நமக்குப் போதுமானதல்ல. ஆகையால், நெய்பவர்கள் தங்களுக்குவேண்டிய நூலை அயல்நாடுகளிலிருந்து தருவிக்கிருர்கள். கரம்பக்குடியிலும் அதன் அருகிலும் உள்ளவர்கள் அதிகமாக நூல் துணி நெய்கிருர்கள். இந்தத் தொழில் செய்பவர்கள் பறையர்கள். பறையன் கைத்துண்டு என்று நீ கேழ்விப்பட்டிருப்பாய். இவர்கள் தங்களுக்குவேண்டிய சேலைகளை செய்துகொள்ளுகிருர்கள். துண்டுகள் போடுகிருர்கள்.

ஆனல் இவர்கள் பழைய மாதிரியான தரியில் கையால் நெய்கிருர்கள். அதனல் விலை ஜாஸ்தியாய் விடுகிறது. அயல் நாடுகளில் யந்திரங்களில் வேலை செய்வோர் குறைந்த நேரத்தில் அதிக நீளமான வஸ்திரத்தை நெய்து விடுகிருர்கள். ஆகையால் இந்தத் தொழில் இப்பொழுது குறைந்துகொண்டே வருகிறது.

நம்மவர்களுக்கும் சுலபமாக நெய்யக் கற்றுக் கொடுப்பதற்காக கரம்பக்குடியிலும் டவுன் புதுச்சேரியிலும் அரசாங்கத்தார் தேர்ந்த ஆசிரியர்களைக் கொண்டு நெசவுப் பள்ளிக்கூடம் நடத்திவருகிருர்கள். இதில் புதிய முறைகள் பல கற்றுக்

கொடுக்கப்படுகின்றன. இங்கே உபயோகிக்கும் தரிக்கு விசைநாடாத்தரி என்று பெயர். இதை நீ பார்த்திருக்கிறாயா? உனக்கு ஆசை யிருந்தால் நீயும் இதைக் கற்றுக் கொள்ளலாம்.

ii. பட்டுநெசவு.

திருவப்பூரில் பட்டுச்சேலைகள் நெய்யப்படுவ தாகப் படித்தோம். நம்முடைய ஸமஸ்தானத் தில் பரம்பூரிலும் இந்த நெசவு நடக்கிறது. கொடும்பாளூர் பக்கத்தில் உள்ள சேணியப்பட்டியி லும் இந்நெசவு உண்டு.

பட்டுப்பூச்சி புழுவாயிருக்கும்பொழுது தன் தேகத்திலிருந்து வரும் பசைபோன்ற ஒரு வஸ் துவை நூல்போல் இழுத்து தனக்கு ஒரு கூடுகட் டிக் கொள்ளுகிறது. இந்தக் கூண்டிலிருக்கும் நூலையே பட்டாக உபயோகிக்கிறார்கள். பட்டு எடுப் பதற்காக இப்பூச்சிகளைப் பல இடங்களில் வளர்க் கிறார்கள். நம்முடைய சமஸ்தானத்தில் இப்பூச் சிகளை ஒருவரும் வளர்க்கவில்லை. ஆயினும் பட்டு நெசவு மட்டும் மேலே சொன்ன இடங்களில் நடக்கிறது.

சேணியர்கள் என்று ஒரு ஜாதியார் இருக் கிறார்கள். இவர்கள் பட்டு நெசவில் கைதேர்ந்தவர் கள். தாங்கள் குடியேறி இருக்கும் இடங்களில்

எல்லாம் தங்களுக்குத் தெரிந்த தொழிலாகிய பட்டு நெசவைக் கையாளுகிறார்கள். நம்முடைய ஊர்களில் பட்டு உண்டாகாவிட்டாலும், பருத்தி நூலை வெளியிலிருந்து வரவழைப்பது போல, பட்டு நூலையும் வரவழைக்கிறார்கள். பிறகு அதற்குப் பலவகை சாயம் ஏற்றி ஆடைகளாக நெய்கிறார்கள். திருவப்பூரில் நெய்யப்படும் பட்டு ஆடைகள் செட்டி நாடுகளில் அதிகமாக வியாபாரம் ஆகின்றன.

iii. கம்பளி நெசவு.

மேலே சொன்னவையின்றி இன்னொரு நெசவும் நம்முடைய நாட்டில் நடக்கிறது. நீ உட்கார விரிக்கப்படும் கம்பளம், உன் படுக்கையின் கீழ் போட்டிருக்கும் கம்பளம், நீ குளிருக்கு போர்த்துக்கொள்ளும் கம்பளம், இவை எங்கே செய்யப்பட்டன தெரியுமா? உயர்ந்த கம்பளங்கள் வெளி நாடுகளிலிருந்து வரவழைக்கப்படுகின்றன. குரும்பன்கைக் கம்பளம் எனக் கேள்விப்பட்டிருக்கிறாயா?

குறும்பாடு உனக்குத் தெரியும். அதன்மேல் வளர்ந்திருக்கும் ரோமம் அடர்த்தியாயும் நீளமாயும் இருக்கும். குறும்பர்கள் என்ற ஜாதியார்கள் இவ்வாடுகளை நூற்றுக்கணக்காக வளர்க்கிறார்கள். இதன் ரோமத்தைக் கத்தரித்து எடுக்கிறார்கள்.

பிறகு பக்குவப்படுத்தி நூலாகத் திரிக்கிறார்கள். அதன்பின் ஒருவகைத் தறியில் கம்பளமாக நெய்கி றார்கள். இதைப் பையாகச்செய்து நவராத்திரி யின் பொழுது விற்பதை நீ பார்த்திருப்பாய். குறும்பர்கள் இருக்கும் இடங்களில் எல்லாம் இந் தத் தொழில் நடக்கிறது. இவர்கள் வைத்தூர், செல்லுகுடி, புத்தாம்பூர், நிலயப்பட்டி முதலிய இடங்களில் இருக்கிறார்கள். அந்த இடங்களில் எல்லாம் கம்பளி நெய்யப்படுகிறது.

1. இப்பாடத்தில் வந்த ஊர்களை உன் படத்தில் போடு. நீ போட்ட ஊர்களில் நடக்கும் தொழிலைக்காட்ட 'நூ. நெ.' 'ப. நெ.,' அல்லது 'க நெ.,' என்று எழுது.

பாடம் 2.

வீடு.

உண்ண உணவும், உடுக்க ஆடையும் அடை யும் விதம் தெரிந்துகொண்டோம். பிறகு நாம் வசிப்பதற்கு வீடு வேண்டும். ஆதிகாலத்தில் நாம் காட்டில் கிடைக்கும் தழைகளைக்கொண்டு நிழல் உண்டாக்கி அதில் வசித்து வந்தோம். புரசை தழைகளால் வேய்ந்த வீடுகளை நீ பார்த்திருப்பாய். கம்பந்தட்டை, வரகுவைக்கோல், நெல்வைக் கோல் இவைகளைக்கொண்டு வேய்ந்த வீடுகள் உன் ஊரில் இருக்கிறதல்லவா? பனைமட்டைக

ளைக்கொண்டு கூரை போடுகிறோம். பின்னப்பட்ட தென்னை மட்டைகளை உபயோகிக்க நாம் தெரிந்து கொண்டிருக்கிறோம். உன் ஊரில் எது அதிகமாக உபயோகப்படுகிறது?

ஓட்டுவீடுகள் இருக்கின்றன. இதற்கு ஓடுகள் எது? உன் ஊரில் ஓடுகள் செய்கிறார்களா? பனம் பட்டியில் ஓடுகள் செய்கிறார்கள். நம்முடைய இராஜ்யத்தில் இன்னும் பல இடங்களிலும் ஓடுகள் செய்யப்படுகின்றன. சில இடங்களில் தார்சு கட்டிடம் கட்டுகிறார்கள். இதற்கு ஓடு தேவையில்லை. தார்சு போட ஒருவகை செங்கல்லை உபயோகிக்கிறார்கள். இது செல்லுகுடியின் பக்கத்தில் உள்ள எல்லைப்பட்டி என்ற ஊரில் செய்யப்படுகிறது.

வீடுகளுக்கு சுவர் வேண்டும். சிலர் மண்சுவர் எடுக்கிறார்கள். சிலர் செங்கல் சுண்ணாம்பினால் சுவர் எடுக்கிறார்கள். செங்கல் பல இடங்களில் செய்யப்படுகின்றன. ஆதனக்கோட்டையின் பக்கத்திலுள்ள கருப்புடையான்பட்டியில் கிடைக்கும் சுண்ணாம்புக்கல் சிலாக்கியமானது. இக்கற்களை சுண்ணாம்புக் காளவாயில் போட்டு எரித்து நீறுக்குகிறார்கள். இந்நீறே கட்டிடம் கட்ட உபயோகப் படுகிறது.

தளத்தில் போடும் சதுர செங்கல்லை நீ பார்த்திருப்பாய். துரைத்தனத்தார் கட்டியிருக்கும் கட்டிடங்களின் தளத்தில் இது போடப்பட்டிருக்கும். இவற்றை நாமும் வாங்கி உபயோகிக்கலாம். இந்தச் செங்கல் ஸர்க்காரால் புதுக்கோட்டையில் யந்திரத்தைக்கொண்டு செய்யப்படுகிறது.

ஓடுகள், செங்கல் முதலியன களிமண்ணிலிருந்து செய்கிறார்கள். இவற்றை செய்வதற்கு ஒரு அளவுச் சட்டம் உண்டு. அதற்கு கட்டளை என்று பெயர். அதை நீ பார்த்திருக்கிறாயா? இச் சட்டத்தின் உதவியால் செங்கல் ஓடு முதலியவற்றை அறுக்கிறார்கள். இந்தச் செங்கல்லுக்கு இப்பொழுது பச்சைவெட்டுக்கல் என்று பெயர். பச்சைவெட்டுக் கற்களாலும் சுவர் எடுப்பதுண்டு. இப்பச்சைவெட்டுக் கற்களை அடுக்கி நடுவில் மரங்கள் வைப்பார்கள். அடியில் அடுப்புகள் கட்டியிருக்கும். அடுப்பில் நெருப்பிட்டு எரிப்பார்கள். இதற்குக் காளவாய் போடுதல் என்று பெயர். நீ காளவாய் எரியும்பொழுது பார்த்திருக்கிறாயா?

மங்களூர் ஓடு என்பதை பார்த்திருக்கிறாயா? இவை நம்முடைய ஸமஸ்தானத்தில் செய்யப்படவில்லை. இப்பொழுது பலர் இந்த ஓடுகளை உபயோகிக்கிறார்கள். இதனால் நம் நாட்டில் ஓடு

அறுப்பது முந்திபோல் அவ்வளவு ஜாஸ்தியாக இல்லே.

சில வீடுகளில் கருங்கல் தூண்கள் நிறுத்தியிருப்பதைப் பார்க்கிறோம். சில இடங்களில் தளம் கருங்கல்லால் போடப்பட்டிருக்கிறது. உன் ஊரிலாவது அல்லது அதன் பக்கத்திலாவது கற்களால் கட்டின கோவில்கள் இருக்கின்றனவா? இந்தக்கற்களே குன்றுகளிலிருந்து கல்தச்சர்கள் பெயர்த்து எடுக்கிறார்கள். இவ்விதம் கற்களெடுப்பதை நீ பார்த்திருக்கிறாயா? உன் ஊரின் சமீபத்தில் கல் எடுக்கிறார்களா? எங்கிருந்து எடுக்கிறார்கள்? இக்கற்கள் எந்த எந்த ஊர்களுக்கு அனுப்பப்படுகின்றன?

குன்றின் மேல் தளத்தில் கட்டைகளேப் போட்டு எரிக்கிறார்கள். உஷ்ணத்தினால் மேல் பாரை கொஞ்சம் பெரிதாகி கீழ்பாரையினின்றும் விலகுகிறது. இதைத் தெரிந்துகொண்டு பாறை சுடுகிறவன் அந்நெருப்புக் கட்டைகளே இரும்புக் கம்பியால் இழுத்து கொஞ்சதூரத்திற் கப்பால் வைப்பான். அங்கேயும் பாறை பெயர்ந்ததைத் தெரிந்துகொண்டு இன்னும் கொஞ்சம் அப்பால் நெருப்பை இழுத்துப் போடுவான். இவ்விதமாகச்செய்து மேல்பாறையைத்தகடுபோல் பெயர்த்து விடுவான். அதன்பின் தனக்கு வேண்டிய வித

மாக கல்தச்சன் ஆங்காங்கு சிறுகுழிகள் அடித்து பாறையை உடைத்து விடுவான். பிறகு இவை வியாபாரத்திற்கு அனுப்பப்படுகின்றன.

வேறு விதமாகவும் கல் பெயர்ப்பது உண்டு. ஆழமாக ஒரு சிறு குழி அடித்து வெடிமருந்தை வைத்து வெடிக்கச்செய்வார்கள். திருநாட்களில் அதிர்வேட்டுப் போடுவதை நீங்கள் பார்த்திருப் பீர்கள். இவ்விதம் செய்வதால் கற்கள் பெரிதும் சிறிதும் ஆக பெயர்ந்துவிடும். பிறகு நமக்கு வேண்டியபடி கற்களை கல் தச்சர்களைக் கொண்டு அடித்து எடுத்துக்கொள்ளவேண்டும்.

கற்கள் செட்டி நாடுகளில் அதிகமாக உப யோகமாகின்றன. இதனால் கல் தச்சர்களுக்கு பிழைப்பு ஏற்படுகிறது. கல் எடுக்கப்படும் குன்று களின் பக்கத்தில் கல் தச்சர்கள் அதிகமாக இருப் பதை நாம் காணலாம். வயலோகத்தில் கல் தச் சர்கள் அதிகம். அதன் பக்கத்தில் குடுமியாமலை இருப்பதைப் படத்தில் கவனி. வயலோகத்தில் உள்ள கல் தச்சர்கள் ஐக்யமுறையில் ஒரு சங்க மாக சேர்ந்துகொண்டு கல் வேலை செய்துவருகி றார்கள். இன்னும் திருக்கோகர்ணம், திருமயம், பெருஞ்சினை முதலிய இடங்களில் கல் தச்சர்கள் உண்டு. இவ்விடங்களின் பக்கத்திலுள்ள குன்று களின் பெயர் என்ன ?

குயவர்கள் நம் ஸமஸ்தானத்தில் பல இடங்களில் வசிக்கிறார்கள். மழையூர், பிரம்பூர், கைக்குரிச்சி, பூவரசகுடி, குசலாக்குடி, தேனீப்பட்டி, அன்னவாசல், விராச்சிலை, வாராப்பூர் முதலிய இடங்களில் மண்பாண்டங்கள் செய்யப்படுகின்றன. மழையூரில் செய்யப்படும் மண்கூஜா வெகு நேர்த்தியானது. நாகரீகம் அதிகம் ஆக ஆக நாம் மண்பாண்டங்களை ஜாஸ்தியாக உபயோகிப்பதில்லை. ஆகையால் இத்தொழில் வர வர க்ஷீணதசையை அடைகிறது.

பித்தளைப் பாத்திரங்களை அதிகமாக நாம் உபயோகிக்கிறோம். இவை பித்தளைத் தகட்டிலிருந்து செய்யப்படுகின்றன. நம்மூர் கடைகளில் பாத்திரங்களாகவே வரவழைத்து விற்கிறார்கள். சமஸ்தானத்தின் பல இடங்களில் கன்னார்கள் இருந்தும் அவர்கள் பாத்திரங்கள் செய்வதில்லை. ஈயம் பூசுதல், பாத்திரங்களை பழுது பார்த்தல் முதலிய வேலைகள் மட்டும் தான் இவர்கள் செய்கிறார்கள். பித்தளைத் தகடு வரவழைக்கப்படவேண்டும். செய்த ஸாமான்கள் வியாபாரம் ஆகவேண்டும். இந்த இரண்டு ஸாதகங்களும் இல்லாததால்தான் இவர்கள் பாத்திரங்கள் செய்வதில்லை. பொன்னமராவதியில் பித்தளைப் பாத்திரங்கள் கொஞ்சம் செய்யப்படுகின்றன. இங்கே

குயவர்கள் நம் ஸமஸ்தானத்தில் பல இடங்களில் வசிக்கிறார்கள். மழையூர், பிரம்பூர், கைக்குறிச்சி, பூவரசகுடி, குசலாக்குடி, தேனீப்பட்டி, அன்னவாசல், விராச்சிலை, வாராப்பூர் முதலிய இடங்களில் மண்பாண்டங்கள் செய்யப்படுகின்றன. மழையூரில் செய்யப்படும் மண் கூஜா வெகு நேர்த்தியானது. நாகரீகம் அதிகம் ஆக ஆக ஜனங்கள் மண்பாண்டங்களை ஜாஸ்தியாக உபயோகிப்பதில்லை. ஆகையால் இத்தொழில் வர வர க்ஷீண தசையை அடைகிறது.

பித்தளைப் பாத்திரங்களை அதிகமாக நாம் உபயோகிக்கிறோம். இவை பித்தளைத் தகட்டிலிருந்து செய்யப்படுகின்றன. நம்மூர் கடைகளில் பாத்திரங்களாகவே வரவழைத்து விற்கிறார்கள். சமஸ்தானத்தின் பல இடங்களில் கன்னான்கள் இருந்தும் அவர்கள் பாத்திரங்கள் செய்வதில்லை. ஈயம் பூசுதல், பாத்திரங்களை பழுது பார்த்தல் முதலிய வேலைகள் மட்டும் தான் இவர்கள் செய்கிறார்கள். பித்தளைத் தகடு வரவழைக்கப் பணம் வேண்டும். செய்த ஸாமான்கள் வியாபாரம் ஆகவேண்டும். இந்த இரண்டு ஸாதகங்களும் இல்லாததால்தான் இவர்கள் பாத்திரங்கள் செய்வதில்லை. பொன்னமராவதியில் பித்தளைப் பாத்திரங்கள் கொஞ்சம் செய்யப்படுகின்றன. இங்கே

பணக்காரர்களாகிய நாட்டுக்கோட்டை செட்டிம
கள் அதிகமாக வசிப்பதால், முதல் போட்டுத் தக
கள் வரவழைப்பதும், செய்யப்படும் பாத்திரங்க
வியாபாரம் ஆவதும், இலகுவாகிறது.

கீரனூரில் வெண்கலப் பாத்திரங்கள் செ
யப்படுகின்றன. ஆனால் அது அவ்வளவு பி
பலமாக இல்லை.

1. பாத்திரங்கள் செய்யப்படும் ஊர்களை உன் படத்தி
குறித்து அதன்பக்கத்தில் பி.பா., வெ.பா., ம.பா., வெ
எழுது.

2. பித்தளை, வெண்கலம் இவை எப்படி செய்யப்ப
கின்றன? வெண்கலப் பாத்திரங்களில் சில சொல்லு.

3. ஏன் பித்தளைப் பாத்திரங்கள் ஸமஸ்தானத்தி
அதிகமாக செய்யப்படவில்லை?

பாடம் 4.

வைத்தியசாலை.

நமக்கு வேண்டிய ஆகாரம், ஆடை, வீ
முதலியவற்றைப்பற்றித் தெரிந்துகொண்டோ
நாம் சௌகரியமாயிருக்க என்ன என்ன ஏற்பா
கள் செய்யப்பட்டு இருக்கின்றன என்பதை இ
பொழுது ஆராய்வோம்.

'வெள்ளம் வருமுன் அணைபோடுவது ந
லது,' என்பார்கள். நோயின் வாயில் அகப்பட்
அதனின்றும் தப்ப முயல்வதைவிட நோய்க

இடம் கொடுக்காமலிருப்பது நல்லதல்லவா? அரசாங்கத்தார் நமக்கு நோய் வராதபடி பார்த்துக் கொள்ள சுகாதார உத்தியோகஸ்தர் ஒருவரை நியமித்திருக்கிறார்கள். அவரும் அவரின்கீழ் வேலை பார்க்கும் இரண்டு இன்ஸ்பெக்டர்களும் கிராமங்களைச் சுற்றிப்பார்க்கிறார்கள். நோயற்ற வாழ்விற்கு கெடுதலாக உள்ளவைகளை கிராமத்தாருக்கு எடுத்துக்காட்டி கிராமம் சுத்தமாயிருக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்கிறார்கள். குடி தண்ணீர் கிடைக்காத இடங்களில் கிணறுகள்வெட்ட ஏற்பாடு செய்கிறார்கள். ஜனங்கள் சுகமாய் வாழ்வதற்கு வேண்டிய அறிவை அவர்களுக்குப் புகட்டுகிறார்கள். வியாதிகள், அவற்றின் காரணம், அவற்றை தடுக்கும் மார்க்கம், வியாதி வராமலிருக்க அனுஷ்டிக்க வேண்டிய முறைகள், இவைகளை நீங்களும் பள்ளிக்கூடத்தில் படிக்கிறீர்கள்.

நமக்கு வியாதி வந்துவிட்டால் மருந்து கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். நம்முடைய கிராமத்தில் காலரா முதலிய தொத்து வியாதிகள் வந்துவிட்டால் உடனே பக்கத்து வைத்தியசாலையில் உள்ள வைத்தியர் மருந்துகளுடன் வந்து வேண்டியன செய்கிறார். புதுக்கோட்டை, கரம்பக்குடி, ஆலங்குடி, கீழாநிலை, திருமயம், பொன்னமராவதி, கீரனூர், விராலிமலை, அன்னவாசல்,

பெருங்களூர், இந்த இடங்களில் வைத்தியசாலைகளை ஏற்படுத்தி நோயாளிகளுக்கு மருந்துகள் கொடுக்க இராஜாங்கத்தார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

புதுக்கோட்டையில் உள்ள ஆஸ்பத்திரியில் நோயாளிகள் ஆஸ்பத்திரியிலேயே தங்கி இருப்பதற்கு வசதிகள் ஏற்பட்டிருக்கின்றன. ராணி ஆஸ்பத்திரியிலும் இந்த ஏற்பாடு இருக்கிறது. நம் நாட்டு வைத்தியத்தை ஆதரிக்க வேண்டி ஆயுர்வேத வைத்தியசாலை ஒன்று ஏற்படுத்தியிருப்பதை நீ அறிந்திருக்கலாம்.

ராமச்சந்திரபுரத்தில் ஒரு நாட்டுக்கோட்டைச் செட்டியார் தரும ஆஸ்பத்திரி ஒன்று ஏற்படுத்தியிருக்கிறார். இதில் மின்சார சக்தியால் வியாதிகளை சொஸ்தம் செய்ய ஏற்பாடு செய்திருக்கிறார்.

1. வைத்தியசாலைகள் உள்ள இடங்களை உன் படத்தில் குறித்து அதன் பக்கத்தில் "வை." என்று குறி

2. ஸுகாதார இலாகாவைப் பற்றிய ஒரு சிறு வியாஸம் எழுது

பாடம் 5.

தந்தி தபால் ஆபீஸ்கள்.

நம்மைச் சேர்ந்தவர்களில் சிலர் உள்ளூரிலேயே இருக்கிறார்கள். சிலர் அயலூர்களிலிருந்

கிருர்கள். அயல் ஊர்களில் உள்ள நம்முடைய பந்துக்களை நாம் அடிக்கடி பார்த்துவருவது சாத்தியமா? அதிக செலவு ஆகும் அல்லவா? ஆனல் காகிதம் எழுதினல் நாம் அவர்களைப் பற்றிய விஷயங்களை சீக்கிரம் தெரிந்துகொள்ளலாம். காகிதம் எழுதி தபாலாபீஸில் போடுகிருேம். அங்கே உள்ளவர்கள் எல்லாக் கடிதங்களையும் எடுத்து முத்திரையிட்டுப் போகவேண்டிய ஊர்களுக்கு அனுப்புவார்கள். இதைப்பற்றிய விவரத்தை உன் பாடத்தில் படித்திருப்பாய். நம்முடைய இராஜ்யத்தில் ஆலங்குடி, அரிமளம், கரம்பக்குடி, கீரனூர், கோனப்பட்டு, புதுக்கோட்டை, பொன்னமராவதி, ராமச்சந்திரபுரம், ராயபுரம், திருமயம் இவ்விடங்களில் தபாலாபீஸ் உண்டு. இங்கே தந்தியாபீஸும் உண்டு. அதன் உபயோகம் என்ன? இவற்றில் புதுக்கோட்டையில் இருப்பது பெரிய ஆபீஸ். மற்றவை சிறியவை. இவைதவிர பல கிராமங்களில் கிளை ஆபீஸ்கள் உண்டு.

நீ அயல் ஊரிலுள்ள ஒருவருக்கு தபாலாபீஸ் மூலம் பணம் அனுப்புகிருய். தீபாவளிக்கு புதிய சட்டை, வேஷ்டி, முதலியன பார்ஸல் மூலமாக உன் சொந்தக்காரரிடமிருந்து உனக்கு வருகிறது. உன் உபாத்தியாயர் உங்களுக்காக புஸ்தகங்கள் வரவழைக்கிருர். அவை, தபால் மூலம்

வருகின்றன. புஸ்தக வியாபாரிக்கு உன் உபாத்தியாயரைத் தெரியாது. ஆனாலும் உபாத்தியாயர் புஸ்தகம் வேண்டுமென ஒரு கார்டு எழுதுகிறார். உடனே அந்த வியாபாரி புஸ்தகங்களுக்காக தனக்கு வரவேண்டிய தொகை எவ்வளவென அந்த பார்ஸலில் குறிக்கிறார். பார்ஸல் அந்த ஊர் தபாலாபீஸில் கொடுக்கப்படுகிறது. உன் ஊரிலுள்ள தபால் ஆபீஸ் சேவகன் ஒரு நாள் அந்த பார்ஸலை உன் உபாத்தியாயரிடம் கொடுத்துவிட்டு பணத்தை வாங்கிக்கொண்டுச் செல்கிறான். பணம் வியாபாரியிடம் அனுப்பப்படுகிறது. இது எவ்வளவு சௌகரியமான வழி!

உன் உபாத்தியாயர் சென்னையிலுள்ள ஒருவருக்கு ரூபாய் 500 அனுப்பவேண்டும். அவர் 500 ரூபாய்நோட்டு ஒன்று எடுக்கிறார். அதை ஒருஉறையில் போட்டு முத்திரையிடுகிறார். அந்த உறையின் மேல் ரூபாய் ஐன்னூறுக்கு இன்ஷுர் (Insure) செய்திருக்கிறது," என எழுதுகிறார். அதை தபால் ஆபீஸ்காரர்கள் வாங்கிக்கொண்டு வெகு ஜாக்கிரதையாக விலாஸதாரரிடம் சேர்த்து விடுகிறார்கள். நடுவில் அந்த உறை தவறிவிட்டால் தபாலாபீஸ்காரர்கள் உறையின்மேல் எழுதப்பட்டிருக்கும் தொகைக்கு ஜவாப்தாரியாவார்கள். பணத்திற்கு பதிலாக நகைகள், விலை உயர்ந்த

ஸாமான்கள் முதலியனவும் அனுப்பலாம். எவ்வளவு விதத்தில் தபாலாபீஸ் நமக்கு உபயோகப்படுகிறது பார். இவையெல்லாம் செய்ய ஏற்பட்ட கட்டணத்தை தலை (Stamp) மூலமாகவோ ரொக்கமாகவோ செலுத்துகிறோம்.

1. உன் ஊரில் தபாலாபீஸ் இருக்கிறதா? இல்லாவிட்டால் எந்தெந்த நாட்களில் தபால்காரன் உன் ஊருக்கு வருகிறான்? எந்த ஊரிலிருந்து வருகிறான்?

2. உன் ஊரிலோ அல்லது பக்கத்திலோ உள்ள போஸ்டாபீஸ், இதர எந்த போஸ்டாபீஸ்களுக்கு கடிதங்களை அனுப்புகிறது? எந்த எந்த போஸ்டாபீஸ்களிலிருந்து கடிதங்களை அடைகிறது?

3. உன் படத்தில் போஸ்டாபீஸ்களைக் குறி. போஸ்டாபீஸ் என்று தெரிவதற்காக 'போ,' என்று பக்கத்தில் எழுது.

4. தபாலாபீஸால் நாம் அடையும் நன்மைகளிற் சில எழுது.

பாடம் 6.

பத்திரப்பதிவு இலாகா.

உன் தகப்பனார் ஒரு வீடு வாங்குகிறார். அப்பொழுது பத்திரம் எழுதி வாங்குகிறார். நிலத்தின் ஒரு பாகத்தை விற்கிறார். அப்பொழுது ஒரு பத்திரம் எழுதிக் கொடுக்கிறார். இன்னும் பல சந்தர்ப்பங்களில் பத்திரம் எழுதிக்கொடுக்க நேரிடுகிறது.

இந்தப் பத்திரங்களெல்லாம் வெகு ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். இவை கெட்டுப் போனால் பணத்திற்கோ, வீட்டிற்கோ, அல்லது நிலத்திற்கோ மோசம் வந்துவிடும். ஆகையால் இவைகளை ஸர்க்கார் அறியச் செய்துகொள்வது நல்லது. எப்படி ஸர்க்கார் அறியச் செய்வது?

ஸர்க்காரில் பத்திரங்கள் என்ற முத்திரைக் கடிதங்கள் அச்சிட்டு வைத்திருக்கிறார்கள். அவை பல விலைகளில் இருக்கின்றன. பத்திரத்தில் காணப்படும் தொகைக்குத் தகுந்தபடி அந்த முத்திரைக்கடிதம் வாங்கவேண்டும். அதில் விஷயங்களை எழுதி நம்முடைய ஊருக்கு சமீபத்திலுள்ள கிளைப்பதிவு ஆபீஸில் (Sub Registry Office) பதிவதற்காக கொடுக்கவேண்டும். பதிவதற்கு ஏற்பட்ட கட்டணமும் கட்டவேண்டும். அங்கே வெகு அழுத்தமாக செய்யப்பட்ட புஸ்தகங்களில் இப்பத்திரத்தின் நகலை எழுதி வைத்துக் கொள்வார்கள். நமக்குப் பத்திரம் கெட்டுப்போனாலும் அந்த ஆபீஸிலிருந்து நகல் வாங்கிக்கொள்ளலாம்.

ஜனங்கள் பத்திரம் பதிவதற்காக வெகுதூரம் செல்வது சாத்தியமா? ஆகையால் தேவைக்குத் தகுந்தபடி, புதுக்கோட்டை, கீழாநிலை, காரம்பக்குடி, விராலிமலை, ஆலங்குடி, திருமயம், கீரனூர், பொன்னமராவதி, பெருங்களூர், அன்னவாசல்,


வடக்கு
10°
30'
15'

இந்த ஊர்களில் சப்ரிஜிஸ்தரி ஆபீஸ்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

1. சப்ரிஜிஸ்தரி ஆபீஸ் உள்ள ஊர்களை படத்தில் குறித்து அதன் பக்கத்தில் ச.ரி., என்று எழுது

2. உன் ஊர்க்காரர்கள் எந்த சப் ரிஜிஸ்தரி ஆபீஸுக்கு பத்திரம் பதியப்போகிறார்கள்?

3. உன் படத்தில் உன் ஊருக்கு அருகில் உள்ள சப்ரிஜிஸ்திரி ஆபீஸைக் குறி. அந்த ஆபீஸில் பத்திரம் பதியும் ஊர்களின் விஸ்தீரணத்தை சுமாராக ஒரு கோட்டால் குறி.

4. பத்திரம் பதிவதால் உண்டாகும் நன்மையென்ன?

அத்தியாயம் 5.

இதர ஸர்க்கார் உதவிகள்.

பாடம் 1.

ஐக்ய சங்கங்கள்.

அரசாங்கத்தார் நம்முடைய சௌகரியத்திற்காக இன்னும் என்ன செய்கிறார்களென்பதைக் கவனிப்போம். நமக்கு அடிக்கடி பணம் தேவையாயிருக்கிறது. தீபாவளிக்கு புதிதாக ஆடைகள் வாங்கவேண்டும். கல்யாணங்கள் நடத்த வேண்டும். சாகுபடி செய்ய மாடுகள் வாங்கவேண்டும். விதைகள் வாங்கவேண்டும். நிலத்தைச் சீர்திருத்தவோ கிணறு வெட்டவோ பணம் வேண்டும். இதற்கெல்லாம் நாம் என்ன செய்வது? நாம்

நிலத்தில் விளைவிக்கும் தானியம் முதலியவைகளை விற்றுப் பணம் சேகரிக்கலாம். ஆனால் 'ஐயா வரும்வரை அமாவாசை காத்திருக்குமா,' என்று ஒரு பழமொழி உண்டு. நிலம் விளைந்து தானியம் விற்கும்வரை நாம் எந்தக்காரியத்தை நிறுத்தி வைக்க முடியும்?

இந்த ஸமயங்களில் சிலர் நமக்குப் பணம் கொடுக்கத் தயாராயிருக்கிறார்கள். அவர்கள் பணம் கொடுப்பதின் நோக்கம் என்ன? 'ஆடு நனைகிறதே என்று அழுததாம் ஓநாய்,' என்ற கதையாக இவர்களுக்கு நம்முடைய கஷ்டங்களை நிவர்த்திக்க வேண்டுமென்ற கவலையா? இல்லவே இல்லை. இவர்கள் நம் நிலத்தை அல்லது வீட்டை ஈடாக எழுதி வாங்கிக்கொண்டுப் பணம் கொடுக்கிறார்கள். அந்தப்பணத்திற்கு நாம் அதிகவட்டி கொடுக்க வேண்டும். ஒரு வெள்ளாமையில் நமக்குக் கொஞ்சம் பணம் கிடைக்கிறது. அதை கடனுக்காக வாங்கிக்கொள்ளுவார்களா? மாட்டார்கள். பூராப் பணமும் ஒரே தடவையில் கொடுக்கவேண்டும். அது நம்மால் முடியுமா? பணம் திரும்பிவந்தால் போதுமென்று இருந்தால் அல்லவா நம்மிடமிருந்து சிறுகச்சிறுகப்பணம் பெற்றுக்கொள்வார்கள்! அவர்களின் நோக்கம் அது அல்லவே. ஈடாகக்கண்ட நிலத்தையோ வீட்டையோ தன்னு

டையது ஆக்கிக்கொள்ளவேண்டும் என்பது அல்லவா அவர்களின் குறி. இப்படிப் பட்டவர்களிடம் நாம் கடன் வாங்குவதால் நம்முடைய சொத்துக்களை நாம் இழக்க வேண்டியதுதான்.

ஐக்யநாணயச் சங்கம் என்று நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். கூட்டு வியாபாரம் செய்ய ஒரு கிராமத்தில் சிலர் ஒன்ருய்க் கூடுகிருர்கள். வியாபாரம் செய்ய முதல் வேண்டாமா? இதில் சேருகிற ஒவ்வொருவரும் இந்த வியாபாரத்தில் பங்குக்காரர்கள். ஒவ்வொருவரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகள் எடுத்துக்கொள்ளலாம். இவர்கள் பங்கு ஒன்றுக்கு ரூபாய் 5 வீதம் முதல் போடுகிருர்கள். இந்த ஐக்ய (கூட்டு)ச் சங்கம் செய்யும் வியாபாரம் என்ன? முன்னமேயே பல ஸமயங்களில் நமக்குப் பணத்தேவை ஏற்படுகிறதென்று பார்த்தோம். அந்தச்சமயத்தில் இச்சங்கம் நமக்குப் பணம் கொடுத்து உதவுகிறது. இதில் சேர்ந்திருப்பவர்கள் யார்? நாமும் நம்மூரில் உள்ளவர்களும் தானே. நம்முடைய தேவைகளைப்பற்றி ஒவ்வொருவருக்கும் நன்ருய்த் தெரியும். ஆகையால் நாம் இதிலிருந்து அவசியமில்லாத செலவுகளுக்குப் பணம் வாங்கமுடியாது. பங்குக்காரர்கள் அல்லாத மற்றவர்களுக்கு இதில் பணம் கொடுப்பதில்லை. நாணயமில்லாதவர்கள் இச்சங்

கத்திலும் சேரமுடியாது. எல்லாரும் பங்குக்காரர்கள். ஆகையால் எல்லாருக்கும் பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது. பணம் மோசம்போக இடமில்லை. கடன் கொடுப்பதில் நம்முடைய சொத்துக்களைப் பிடுங்கிக்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் இச்சங்கத்திற்குக் கிடையாது. கையில் கிடைத்த தொகையைக் கொடுத்து நம்முடைய கடனை கொஞ்சம் கொஞ்சமாக குறைத்துக்கொள்ளலாம். இது எவ்வளவு சௌகரியம்! வட்டியும் வெகு சொற்பம். இதில் யாருக்கு லாபம் வேண்டும்? எல்லாரும் நாம் தானே. லாபம்வந்தாலும் அதில் ஒரு பாகத்தை நாம் போட்ட பங்குகளுக்குத் தக்கபடி நாமே பிரித்துக்கொள்கிறோம்.

நாம் அதிகக் கடன்காரர்களாகாமல் இருப்பதற்காக அரசாங்கத்தார் இவ்விதம் செய்கிறார்கள். 'அபிவிருத்தி இலாகா,' என்று ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதன் தலைவர் தன்கீழுள்ள உத்தியோகஸ்தர்களைக்கொண்டு கிராமங்கள்தோறும் இவ்விதச் சங்கங்கள் ஏற்படுத்துகிறார்கள். இந்தச் சங்கங்களுக்குப் பண உதவி செய்ய மத்திய சங்கம் என்று புதுக்கோட்டையில் ஒன்று இருக்கிறது.

இந்த மத்தியசங்கத்திற்குப் பணம் ஏது? நம்மில் அநேகர் தாம் சேர்த்துவைக்கும் பணத்தை

இம்மத்திய சங்கத்தில் போட்டுவைக்கிருர்கள். ஸர்க்காரும் இதற்குப் பண உதவி செய்கிருர்கள்.

நாம் இதுவரைப் படித்துவந்த சங்கத்திற்கு ஐக்யநாணயச் (பணம்) சங்கம் என்று பெயர். இதன்வேலை கடன்கொடுப்பதும் வாங்குவதும் மட்டுந்தான். இதர வேலைகளுக்காகவும் ஐக்கிய சங்கங்கள் ஏற்படுத்திக்கொள்ளலாம். நமக்கு வீட்டுக்கு வேண்டிய ஸாமான்களைக் கடையில் வாங்குகிரும். ஆகையால் நாம் கடைக்காரர்கள் வைக்கும் லாபத்தையும் சேர்த்து ஸாமான்களுக்குப் பணம் கொடுக்கிரும். நம்மில் சிலர் சேர்ந்து நமக்கு வேண்டிய ஸாமான்களை மொத்தமாக நேரில் வரவழைத்துப் பிரித்துக் கொள்ளலாமல்லவா? அப்பொழுது நமக்கு நல்ல ஸாமானுக கிடைப்பதுடன் குறைந்த விலைக்கும் நாம் ஸாமான்களைப் பெறலாம். இதற்காக சங்கங்கள் ஸ்தாபித்துக் கொள்ளலாம். தனித்தனியாக ஒரு தொழிலை நடத்த சக்தியில்லாத பொழுது பலர் சேர்ந்து அந்தத் தொழிலை நடத்துவதும் சுலபமாகுமல்லவா?

1. உன் ஊரில் ஐக்ய நாணயச் சங்கம் உண்டா? இருந்தால் அதை நிர்வகிப்பதற்காக யார் யார் ஏற்பட்டிருக்கிருர்கள்?

2. எந்த எந்த தொழில் நடத்த ஐக்ய சங்கம் ஏற்படுத்திக்கொள்ளலாம்?

3. வயலோகத்தில் ஏற்பட்டிருக்கும் தொழிற்சங்கத்தைப்பற்றி ஒரு வியாஸம் எழுது.

பாடம் 2.

விவசாயத்திற்கு உதவி.

முந்தி நிலத்தைப் பண்படுத்தும் விஷயமாகப் படித்தோம். நிலத்தைப்பண்படுத்த உழவேண்டும். அதற்கு மாடுகள் வாங்கவேண்டும். நம்முடைய சீமை வானம்பார்த்த சீமையென்று படித்தோம். சரியான சமயங்களில் மழை பெய்யாவிட்டால் நாம் சாகுபடி செய்யமுடியாது. ஆகையால் நல்ல கிணறுகள் வெட்டிக்கொண்டால், முழுவதும் மழையையே நம்பியிருக்கவேண்டிய அவசியமிராது. மேலும் நிலத்தைச் சீர்திருத்தவும், மேட்டு நிலங்களைப் பள்ளமாக்கவும், இன்னும் இவைபோன்ற காரியங்களுக்கும் நமக்குப் பணம் வேண்டும். இதற்காக நாம் ஸர்க்காரிலிருந்து வெகு சொற்பவட்டிக்கு கடன் வாங்கிக் கொள்ளலாம். ஒவ்வொரு வருஷமும் வெள்ளாமை விளைந்தவுடன் இந்தக் கடனில் கொஞ்ச பாகத்தை நாம் ஸர்க்காருக்குத் திருப்பிக் கொடுத்துவிடலாம். இவ்விதமாகப் பல வருஷங்களில் நம்முடைய கடனை நாம் அடைத்துவிடலாம். மேலும் நமக்கு சாகுபடிக்கு வேண்டிய காலத்தில் விதை

யைக் கொடுத்து அறுவடை காலத்தில் வட்டியில்லாமல் விதையின் பணத்தை சர்க்காரில் திருப்பி வாங்கிக்கொள்ளுகிறார்கள்.

1. உன் ஊரில் விவசாயத்திற்காக யாராவது கடன் வாங்கியிருக்கிறார்களா? அவ்விதம் வாங்கியிருந்தால் அப்பணத்தைக்கொண்டு என்ன காரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன?

பாடம் 3.

கல்வி.

'எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்', என நாம் படித்திருக்கிறோம். அறிவு இல்லாதவனை மூடன் என்பார்கள். நாம் அறிவுள்ளவர்களாக இருக்கவேண்டியது அவசியமல்லவா? எழுதப் படிக்கத் தெரிந்தால்தானே நாம் அறிவுள்ளவர்களாக ஆகலாம். ஸர்க்காரில் அனேகமாக கிராமங்கள்தோறும் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். சுமார் 500 கிராமங்களில் பள்ளிக்கூடங்களை ஏற்படுத்தி இருக்கிறார்கள். நாம் அவைகளில் சேர்ந்து படிக்க வேண்டியது அவசியம்.

ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் நம்மிடம் சம்பளம் வாங்கக்கூடாதென்று திட்டம் செய்திருக்கிறார்கள். புதுக்கோட்டை டவுனில் மட்டுந்தான் சம்பளம் வாங்கலாம். அங்கேயும் ஸர்க்கார் பள்ளிக்கூடங்களில் சம்பளம் கிடையாது. ஆதிதிரா

விடர்களுக்கும், மகம்மதியர்களுக்கும் தனிப் பள்ளிக்கூடங்களும் உண்டு.

நம் இராஜ்யத்தில் உள்ள பெண் குழந்தைகள் படித்துகெட்டிக்காரர்களாக ஆகவேண்டாமா? இவர்களுக்காகவும் தனிப்பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. புதுக்கோட்டையி லுள்ள ராணீஸ் ப்ரீ ஸெகண்டரீ ஸ்கூலை (Ranee's Free Secondry School) நீ பார்த்திருப்பாய். அதில் பெண் குழந்தைகளுக்கு உயர்தரக் கல்வியும் கற்றுக்கொடுக்கிறார்கள். ஸர்க்காரால் நடத்தப்படும் பெண் பள்ளிக்கூடங்களில் எல்லாம், அதிகமாக பெண்கள் படிப்பதற்காக மாதா மாதம், படிக்கும் குழந்தைகளுக்கு உபகாரச் சம்பளம் (Stipends) கொடுத்து வருகிறார்கள்.

நாம் உயர்தரப் படிப்பு படிக்கும்பொருட்டு சமஸ்தானத்தில் பல இடங்களில் பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டிருக்கின்றன. புதுக்கோட்டை வடக்கு ராஜவீதியில் உள்ள சின்னகாலேஜ் என்று வழங்கும் ஸ்கூலைப் பார்த்திருப்பாய். இன்னும் இரண்டொரு வருஷங்களில் நீயும் அதில் படிக்க நேரும் அல்லவா? இந்த ஸ்கூலுக்குச் சற்று அப்பால் உள்ள மிஷன் ஸ்கூலை உனக்குத் தெரிந்து இருக்கலாம். வடக்கு ராஜவீதி வழியாகப்போகும் பொழுது அந்த அழகிய பெரிய கட்டிடத்தை நீ

பார்க்காமல் போகமுடியாது. ராமச்சந்திரபுரத்திலும், திருமயத்திலும் உயர்தர கல்விச்சாலைகள் இருக்கின்றன. வெகு அழகிய கட்டிடங்களுடன் கூடிய இந்தப் பள்ளிக்கூடங்களில் படிப்பு இனுமாக சொல்லிக்கொடுக்கப்படுகின்றன. புதுச்சேரியில் ஆதி திராவிடர்களுக்காக ஏற்பட்டிருக்கும் லெகண்டரி ஸ்கூல் ஒன்று உண்டு.

மகாராஜா காலேஜ் உனக்குத் தெரிந்திருக்கலாம். புதுக்கோட்டையில் ஸர்க்காரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் கல்லூரி இது. இதன் நேர்த்தியான கட்டிடத்தை நீ பார்த்திருக்கிருயா? இதில் உள்ள 'தாமரைஹால்' (Lotus hall) என்பது வெகு அழகானது. இக்கல்லூரியில் பெரிய படிப்பு சொல்லிக்கொடுக்கப்படுகிறது. இதில் படித்த அனேகர் நம்முடைய சமஸ்தானத்திலேயே பல பெரிய பதவிகளை வகிக்கிருர்கள். நம்மையாண்ட மஹா-ா-ா-ஸ்ரீ, ரீஜண்ட் சாகிப் அவர்கள், நம்முடைய மஹா-ா-ா-ஸ்ரீ திவான் அவர்கள், சீப் கோர்ட்டில் விளங்கும் பல நீதிபதிகள், அரசாங்கத்தை ஸரியாக நடத்த உதவியாக இருக்கும் பல இலாகாத் தலைவர்கள், இவர்கள் எல்லோரும் நம்முடைய காலேஜில் படித்தவர்களே.

ஜனங்களினிடையே கல்வி விர்த்தியாகும் பொருட்டு வயதானவர்களுக்கும் படிப்புச் சொல்

பாடம் 4.

இதர ஆபீஸ்கள்.

நம்முடைய சொத்துக்களைத் திருடர்கள் கொண்டுபோகாமல் பார்த்துக்கொள்ள போலீஸ் இலாகா ஒன்றை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இந்த இலாகா தலைவருக்கு போலீஸ் கமிஷனர் என்று பெயர். இவரின் கீழ் இன்ஸ்பெக்டர்கள், சப் இன்ஸ்பெக்டர்கள், கான்ஸ்டேபில்கள், முதலிய ர்களை ஏற்படுத்தி ஜனங்கள் சட்ட திட்டங்களை மீறி நடக்காமல் பார்த்துக் கொள்ளுகிறார்கள்.

ப... ஜனங்களின் வழக்குகளைக் கேட்டு நியாயங்
கட்டிட... க நியாயஸ்தலங்கள் பல இடங்களில் ஏற்
தாமை... க்கின்றன.

கானது ...பாலீஸ் ஸ்டேஷன் இருக்கும் இடங்களையும் நியாய
கொடு...களையும் படத்தில் குறி

முடை

பாடம் 5.

களை

ஸ்தல சுய ஆட்சி.

ரீஜ

மஹா நமக்காக அரசாங்கத்தார் என்னென்ன செய்
வி ...ர்களென்பதை இதுவரைப் படித்தோம்.
பா ...க்கு வேண்டியவைகளை நாமே செய்துகொள்ள
தலை ...ண்டாமா? அவ்விதம் செய்துகொள்ள நாம்
காடு ...கவேண்டும். இதில் நமக்குப் பழக்கம் உண்டா
...தற்காகவே சில காரியங்களை நாமே செய்து
பெ ...காள்ளும்படி விட்டிருக்கிறார்கள்.

பாடம் 4.

இதர ஆபீஸ்கள்.

நம்முடைய சொத்துக்களைத் திருடர்கள் கொண்டுபோகாமல் பார்த்துக்கொள்ள போலீஸ் இலாகா ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த இலாகா தலைவருக்கு போலீஸ் கமிஷனர் என்று பெயர். இவரின் கீழ் இன்ஸ்பெக்டர்கள், சப் இன்ஸ்பெக்டர்கள், கான்ஸ்டேபில்கள், முதலிய ர்களை ஏற்படுத்தி ஜனங்கள் சட்ட திட்டங்களை றி நடக்காமல் பார்த்துக் கொள்ளுகிறார்கள்.

ப. னங்களின் வழக்குகளைக் கேட்டு நியாயங் கட்டிட. க நியாயஸ்தலங்கள் பல இடங்களில் ஏற் தாமை க்கின்றன.

கானது பாலீஸ் ஸ்டேஷன் இருக்கும் இடங்களையும் நியாய கொடு களையும் படத்தில் குறி

முடை

பாடம் 5.

ஸ்தல சுய ஆட்சி.

நமக்காக அரசாங்கத்தார் என்னென்ன செய் ர்களென்பதை இதுவரைப் படித்தோம். க்கு வேண்டியவைகளை நாமே செய்துகொள்ள வண்டாமா? அவ்விதம் செய்துகொள்ள நாம் கவேண்டும். இதில் நமக்குப் பழக்கம் உண்டா தற்காகவே சில காரியங்களை நாமே செய்துகொள்ளும்படி விட்டிருக்கிறார்கள்.

புதுக்கோட்டை முனிஸிபாலிட்டி யென்று நீ கேள்விப்பட்டிருப்பாய். அது ஒரு ஸபை. அதற்கு ஒரு தலைவர் உண்டு. அரசாங்கத்தில் நிர்வாக அனுபோகமுள்ள ஒருவரை அதற்குத் தலைவராக நியமித்திருக்கிறார்கள். மற்ற அங்கத்தினர்களில் பெரும்பாலோரை ஜனங்களே தெரிந்தெடுக்கிறார்கள். புதுக்கோட்டையில் உள்ளவர்கள் இதை அறிந்திருப்பார்கள். பலர் தன்னைத் தெரிந்தெடுக்கும்படி வீடுவீடாய் விளம்பரங்கள் கொடுப்பதையும் இன்னாருக்கு ஓட்டுக்கொடுங்கள் என்று பெரிய எழுத்துக்களில் அச்சிட்டு சுவர்களில் ஒட்டப்பட்டிருக்கும் விளம்பரங்களையும் நீங்கள் பார்த்திருப்பீர்கள். இந்த முனிஸிபல் ஸபையார் நமக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்கிறார்கள்.

தெருக்களைக் கூட்டச்செய்து ஊரை சுத்தமாக இருக்கும்படிச் செய்கிறார்கள். புதுக் குளத்தினின்றும் தண்ணீர் கொண்டுவரப்பட்டு அக்குளத்தின் தென்கரையில் உள்ளகட்டிடத்தில் சுத்தமாக்கப்படுகிறது. பிறகு மச்சுவாடியில் இந்த சுத்தத் தண்ணீரைச் சேர்த்துவைத்து, அங்கிருந்து குழாய்களின் மூலம் ஊர் முழுவதும் நல்ல தண்ணீர் கொடுக்கப்படுகிறது. ராத்திரியில் நடமாடுகிறவர்களுக்கு ஸௌகரியமா யிருப்பதற்காக மின்சார

விளக்குகள் போடப்பட்டிருக்கின்றன. டவுனுக் குட்பட்ட ரஸ்தாக்களையும் தெருக்களையும் செப்ப னிட்டு வண்டிகள்போகவும் ஜனங்கள் நடமாடவும் லாயக்காகச் செய்திருக்கிறார்கள்.

இவையெல்லாம் செய்ய பணம்வேண்டாமா? வீடுகளுக்கு வரி ஏற்பட்டிருக்கிறது. இதில் வசூ லாகும் பணத்திலிருந்தும், இதர வருமானத்திலி ருந்தும், ஸர்க்கார் கொடுக்கும் பணத்திலிருந்தும் மேற்கண்டவை யெல்லாம் செய்யப்படுகின்றன.

சிறிய ஊர்கள் சிலவற்றிலும் இவ்விதம் செய் யப்படுகின்றன. அதை யூனியன் என்று சொல்லு கிறார்கள். நம்முடைய சமஸ்தானத்தில் அரி மளம், அன்னவாசல், பொன்னமராவதி, கரம்பக் குடி, திருமயம் இந்த ஊர்களில் யூனியன்கள் இருக்கின்றன. ஆலங்குடி, கீரனூர் முதலிய அனேக இடங்களில் பஞ்சாயத்து ஸபைகள் ஏற் படுத்தப்பட்டிருக்கின்றன. இவர்களும் ஊரில் சில வரிகளை வசூலிக்கலாம். இந்த தொகையைக் கொண்டு ஜன ஸௌகரியத்திற்கான காரியங்களைச் செய்வார்கள். ராமச்சந்திரபுரத்தில் மின்சார விளக்கு போடப்பட்டிருக்கிறது.

1. இந்தப் பாடத்தில் வந்த ஊர்களை உன் படத்தில் குறித்து அதன் பக்கத்தில் 'மு'., அல்லது 'யூ'., என சந்தர்ப் பத்திற்கு ஏற்றபடி எழுது.

2. பஞ்சாயத்துச் சபையைப்பற்றி ஒரு வியாசம் எழுது.

பாடம் 6.

தீர்வைகள்.

அரசாங்கத்தார் நமக்குப் பல சௌகரியங்களைச் செய்து வருகிறார்களென்று படித்தோம். நமக்காக சாலைகள் போடுகிறார்கள். குளம் வெட்டுகிறார்கள். குடி தண்ணீர் கிடைக்காத இடங்களில் கிணறுகள் வெட்டிக் கொடுக்கிறார்கள். தண்ணீர் மடை கட்டுகிறார்கள். வைத்தியசாலைகள் ஏற்படுத்துகிறார்கள். பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிக்கிறார்கள். போலீஸ்காரர்கள் என்ன, நியாயஸ்தலங்கள் என்ன இவைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இன்னும் நமக்குத் தேவையான பல விஷயங்களைச் செய்கிறார்கள். இவைகளை யெல்லாம் செய்வதற்கு அவர்களுக்குப் பணம் வேண்டாமா? எங்கிருந்து அவர்களுக்குப் பணம் வருகிறதென்பதைப் பார்ப்போம்.

முன்னமேயே நாம் நன்செய் புன்செய் என இருவித நிலங்களைப்பற்றிப் படித்தோம். நாம் இன்னிலங்களில் பயிர் விளைவிப்பதற்காக ஸர்க்காருக்குத் தீர்வை செலுத்துகிறோம். தீர்வை நன்செய் நிலத்திற்கு அதிகமாகவும் புன்செய் நிலத்

திற்கு குறைவாகவும் ஏற்பட்டிருக்கிறது. இது தான் அரசாங்கத்திற்கு முக்கியமான வருமானம். இதற்கு நிலவரி என்று பெயர். இதுதவிர, கள்ளுக்கடை, சாராயக்கடை இவைகளின் குத்தகை; காடுகளில் கிடைக்கும் தழைக் குத்தகை; எட்டிக் கொட்டை, ஆவாரப் பட்டை முதலியவற்றின் குத் தகை; விரகுக்கு லாயக்கான மரங்களின் விற்பனை; பத்திரப்பதிவு இலாகா வருமானம்; நியாய ஸ்தலங்களின் வருமானம்; பத்திரங்களின் விற்பனை; இவற்றிலிருந்தும் ஸர்க்காருக்கு வரும்படி கிடைக் கிறது.

இவற்றில் நிலவரி தவிர மற்றவைகளில் அனேகமாக உடனே பணம் வந்துவிடும். ஆனால் நிலவரி மட்டிலும் விளைந்திருக்கும் பொழுது தானே வசூலிக்க முடியும். கிராமங்களில் ஸர்க் காருக்கு வரவேண்டிய வரிகளை வசூலிக்க சில சிப் பந்திகள் ஏற்பட்டிருக்கிறார்கள். அதில் கணக்கப் பிள்ளை என்பவர் ஒருவர். ஒவ்வொரு துண்டு நிலத்திற்கும் ஒரு நம்பர் உண்டு. இதற்கு ஸர்வே நம்பர் என்று பெயர். இந்த ஒவ்வொரு ஸர்வே நம்பர் நிலத்திற்கும் கணக்குப் பிள்ளையிடம் ப்ளான் உண்டு. இதைப் பார்த்தால் அந்நிலத் தின் எல்லைகள் அளவு முதலியன நன்றாய்த் தெரி யும். நீ வயல்களில் ஸர்வே கற்களைப் பார்த்திருப்

பார். அதில் நாமம் போன்ற ஒரு குறி போட்டிருக்கிறதைப் பார். இந்த கற்கள் இன்ன இடத்தில் இருக்கிறதென்பதும் அந்த ப்ளானில் தெரியும். ஆகையால் ஒருவன் மற்றொருவனுடைய நிலத்தைத் சேர்த்துக்கொள்ள முடியாதல்லவா? இந்த ப்ளான்கள் அடங்கிய புஸ்தகங்கள் தவிர, கணக்கப்பிள்ளையிடம் அடங்கல் என்ற ஒரு புஸ்தகம் உண்டு. இந்த அடங்கலில் என்ன அடங்கியிருக்கிறது என்பதைக் கவனி. ஸர்வே நம்பர், நிலத்தின் வகை, விஸ்தீரணம், நிலத்தின் சொந்தக்காரன்பெயர் இவை அடங்கியிருக்கும்.

கணக்கப்பிள்ளை இன்னூர் இன்னூர் ஸர்க்காருக்கு இவ்வளவு தீர்வை செலுத்தவேண்டுமென ஒரு கணக்குத் தயாரிப்பார். கிராமத்தில் மணியகாரர் என்று மற்றொரு உத்தியோகஸ்தர் உண்டு. அவர் கணக்கப்பிள்ளை கொடுத்த கணக்குப்படி குடிகளிடமிருந்து பண வசூல் செய்வார். மாதா மாதம் வசூலான பணத்தை கஜானுவுக்கு அனுப்புவார். ஸர்க்கார் பணத்தை சேமித்து வைத்திருக்கும் இடத்திற்கு கஜானுவென்று பெயர்.

சமஸ்தானத்தை மூன்று தாலூகாக்களாகப் பிரித்திருக்கிறுர்கள். ஒவ்வொரு தாலூகாவிலும் ஒரு கஜனு உண்டு. தாலூகாவின் அதிகாரிக்கு தாசில்தார் என்று பெயர். இவருடைய மேற்பார்

வையில்தான் கஜாஞு இருக்கிறது. இவரின்கீழ் ரெவினியு இன்ஸ்பெக்டர்களென்று சில உத்தியோகஸ்தர்கள் உண்டு. ஒவ்வொரு தாலூகாவையும் ஸுமார் 60 வட்டங்களாகப் பிரித்திருக்கிறார்கள். ஒவ்வொரு வட்டத்திலும் முன்சொன்ன கிராம சிப்பந்திகளும் அவர்களின் வேலையாட்களும் உண்டு.

தாலூகா கஜாஞுக்களின் மேலாக புதுக் கோட்டையிலிருக்கும் கஜாஞுவிற்கு ஹுஸுர் கஜாஞு என்று பெயர்.

1. உன் ஊர் எந்த தாலூகாவில் இருக்கிறது? எந்த வட்டத்தைச் சேர்ந்தது? உன் ஊருக்கு வரும் ரெவினியு இன்ஸ்பெக்டர் எந்த ஊரில் இருக்கிறார்?

2. கீழ்கண்டபடி ஸர்க்காருக்கு வருமானம் வருகிறது நிலவரி 13 லக்ஷம்; பத்திர விற்பனை $3\frac{1}{2}$ லக்ஷம்; கலால் 3 லக்ஷம்; காடு 72 ஆயிரம்; பத்திரப்பதிவு 50 ஆயிரம்; உப்பு 38 ஆயிரம்; நியாய பரிபாலனம் 20 ஆயிரம். பதினாயிரத்திற்கு ஒரு சிறு கட்டமாக மேலேகண்ட வருமானங்களுக்கு ஒரு கிராப் போடு.

பாடம் 7.

சட்ட நிர்மாண சபை.

அரசாங்கத்தார் நம்முடைய குறைகளை யெல்லாம் நன்றாய் கவனித்து, அவற்றை நிவர்த்திக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்கிறார்கள் என்று படித்

யில் நம்முடைய குறைகளை அரசாங்கத்தாருக்கு எடுத்து உரைப்பவர்களையா? அல்லது பெருமைக்காக ஸபைக்குச் செல்வோர்களையா?

1. உன் ஊரில் எப்பொழுது தேர்தல் நடந்தது? உன் டிவிஷனில் யார் யார் ஜனப்பிரதிநிதிகளாக தெரிந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள்?

பாடம் 8.

அரசாக்ஷி.

நம்முடைய சமஸ்தானத்தில் நமக்கு அனுகூலமாக பல காரியங்கள் நடப்பதாகப் படித்தோம். அவ்வித காரியங்கள் பல இலாக்காக்களால் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு இலாகாவுக்கும் ஒரு அதிகாரி உண்டு. இவர் தன் இலாகா சம்பந்தமான விஷயங்கள் ஸரியாய் நடப்பதற்கு ஜவாப்தாரி ஆவார். இவர்களுக்கெல்லாம் மேலே (Council of Administration) அரசாங்க நிர்வாக ஸபை என்று ஒன்று உண்டு. இந்த ஸபை, ஒரு பிரஸிடெண்ட், ஒரு திவான், ஸமஸ்தானத்து தலைமை நீதிபதி இவர்கள் அடங்கியது.

நம்முடைய மகாராஜா மகா-ா-ா-ஸ்ரீ ஹிஸ் ஹைனஸ் ஸ்ரீபிரகதம்பதாஸ ராஜா ராஜகோபால தொண்டைமான் பகதூர் அவர்கள். இவர் இப்பொழுது சிறுவர். இவர் மேஜராகும்வரை மேலே சொன்ன ஸபை அரசாக்ஷி செய்துவரும்.

யில் நம்முடைய குறைகளை அரசாங்கத்தாருக்கு எடுத்து உரைப்பவர்களையா? அல்லது பெருமைக்காக ஸபைக்குச் செல்வோர்களையா?

1. உன் ஊரில் எப்பொழுது தேர்தல் நடந்தது ? உன் டிவிஷனில் யார் யார் ஜனப்பிரதிநிதிகளாக தெரிந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள் ?

பாடம் 8.

அரசாக்ஷி.

நம்முடைய சமஸ்தானத்தில் நமக்கு அனுகூலமாக பல காரியங்கள் நடப்பதாகப் படித்தோம். அவ்வித காரியங்கள் பல இலாக்காக்களால் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு இலாகாவுக்கும் ஒரு அதிகாரி உண்டு. இவர் தன் இலாகா சம்பந்தமான விஷயங்கள் ஸரியாய் நடப்பதற்கு ஜவாப்தாரி ஆவார். இவர்களுக்கெல்லாம் மேலே (Council of Administration) அரசாங்க நிர்வாக ஸபை என்று ஒன்று உண்டு. இந்த ஸபை, ஒரு பிரஸிடெண்ட், ஒரு திவான், ஸமஸ்தானத்து தலைமை நீதிபதி இவர்கள் அடங்கியது.

நம்முடைய மகாராஜா மகா-ள-ள-ஸ்ரீ ஹிஸ் ஹைனஸ் ஸ்ரீபிரகதம்பதாஸ ராஜா ராஜகோபால தொண்டைமான் பகதூர் அவர்கள். இவர் இப்பொழுது சிறுவர். இவர் மேஜராகும்வரை மேலே சொன்ன ஸபை அரசாக்ஷி செய்துவரும்.

பாடம் 9.

மறுமுறைப் பாடம்.

1. கீழே காட்டிய விதமாக உன் நோட்டில் கோ[illegible] போட்டுக்கொள்.

அக்கட்டத்தில் கண்ட பத்திகளை ஒவ்வொரு தாலூ[illegible] வாக எடுத்துக்கொண்டு இதுவரை நீ எழுதியிருக்கும் பட[illegible] களிலிருந்துப் பார்த்து பூர்த்தி செய்.

தாலூகா.	தொடர்ச்சி நெம்பர்.	ஊர் பெயர்.	ஊர்களின் விசேஷங்கள்.
ஆலங்குடி	1	புதுக் கோட்டை	தலைநகர்; முனிஸிப[illegible] லிடி; கச்சேரிகள்; வைத்தியசாலை; காலேஜ்; கோவில்; முதலியன.
	2	...	...

2. கீழே கண்ட குறிப்புகளிலிருந்து க்ராப் படங்க[illegible] வரை.

தாலூகா	இந்துக்கள்	கிறிஸ்தவர்கள்	முகமதியர்கள்	மொத்தம்	விஸ்தீர[illegible]ணம்.
ஆலங்குடி	134,798	6,262	5,385	146,445	347·3[illegible]
குளத்தூர்	117,666	7,694	5,058	130,418	464·8[illegible]
திருமயம்	140,869	4,514	4,567	149,950	366·4[illegible]
மொத்தம்.	393,333	18,470	15,010	426,813	178 5[illegible]

3. குன்றுகள் எந்த தாலூகாவில் இல்லை? ஆகையால் எந்த தாலூகா அதிகமாக விவசாயத்திற்கு ஏற்றது? ஆலங்குடி தாலூகாவின் விஸ்தீரணம் குறைவாயிருந்தும் ஜனத்தொகை அதிகமாயிருக்கக் காரணம் என்ன?

4. நாட்டுக்கோட்டை செட்டிமார்கள் அதிகமாக வசிக்கும் தாலூகா எது? ஒரு ஊருக்குப்போனவுடன் அதுநாட்டுக்கோட்டை செட்டிகள் வசிக்கும் ஊர் என எந்த எந்த அடையாளங்களைக் கொண்டு தெரிந்து கொள்ளலாம்? நீ அவ்வித ஊரைப் பார்த்திருக்கிறாயா? பார்த்திருந்தால் அங்கே, ஊரணி கோவில், வீடுகள் இவை எவ்விதம் இருக்கின்றன? இந்த ஊர்களில் என்ன என்ன தொழிலாளிகளைக் காணலாம்? ஏன்? விஸ்தீரணத்தில் குறைவாயிருந்தும் திருமயம் தாலூகா ஜனத்தொகையில் பெருத்திருப்பதற்குக் காரணம் என்ன?

அத்தியாயம் 6.

புதுக்கோட்டை சீமை சரித்திரம்.

பாடம் 1.

பூர்வ குடிகள்.

சமஸ்தானப் படத்தைப் பார். முந்தி இந்த இராஜ்யம் முழுவதும் காடாய் இருந்தது. அப்பொழுது இங்கே வேடுவர்கள் என்ற ஒரு ஜாதியார் வசித்து வந்ததாகத் தெரிகிறது. இவர்கள் வேட்டையாடி ஜீவிப்பவர்கள். இவர்கள் உபயோகித்த வில், தரித்திருந்த ஆபரணங்கள் இவை

களை மியூஸியத்தில் பார். இப்பொழுதும் பிரான் மலை பக்கத்தில் இவர்களைக் காணலாம்.

இவர்களுக்குப்பின் குறும்பர்கள் இங்கே வந்து குடியேறினதாகத் தெரிகிறது. இவர்களைப் பற்றி முந்தியே நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். இவர்கள் தனக்கு முன் இருந்த வேடுவர்களைத் துரத்தியிருக்க வேண்டும். வேடுவர்களைப் போல் அல்லாமல் இவர்கள் நிலங்களைப் பண்படுத்திச் சாகுபடி செய்ததாகத் தெரிகிறது. அதிகமாக ஆடுகளை வளர்த்து வந்தார்கள். இந்த ஆடுகளுக்குக் குறும்பாடு என்று பெயர். இவர்கள் கம்பளி நெய்கிறதைப்பற்றி முந்தியே படித்தோம். செல்லுகுடி, வைத்தூர் முதலிய இடங்களில் இவர்களை இப்பொழுதும் காணலாம்.

முதுமக்கள் தாழி என நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். இது பிணத்தைப் புதைக்கும் சதுரமான குழி. இதன் பக்கங்கள் கற்களால் கட்டப்பட்டு மேலே ஒரு கல்லால் மூடப்பட்டிருக்கிறது. இவ்விதமான சில குழிகளில் குதிர்போன்ற பானைகள் காணப்படுகின்றன. பேர்போன தலைவர்களை குதிரிலும் மற்ற தலைவர்களை குதிர் இல்லாமலும் புதைத்து இருக்கலாம். சில குழிகளில் நடுவில் ஆள் நுழையும்படியான துவாரமுள்ள ஒரு கல் குறுக்கே வைக்கப்பட்டிருக்கிறது. இக்குழிக்கு

வருவதற்கு இதன் பக்கத்தில் இன்னொரு சிறு குழி உண்டு. இதன் பக்கங்களும் கற்களால் கட்டப்பட்டவை. இந்தவித குழிகளில் காணப்படும் இரண்டு அறைகளில் ஒன்றில் இறந்தவரையும் மற்றொன்றில் அவர் உபயோகித்து வந்த ஆயுதங்களையும் வைத்தார்கள் எனத்தெரிகிறது. இந்தக் குழிகளுக்குப் பலவிதப் பெயர்கள் ஏற்பட்டிருக்கின்றன. பாண்டக்குழி (பாண்டம் - பானை) என்றும், பாண்டவர் குழி (அஞ்ஞாத வாசகாலத்தில் பாண்டவர்கள் ஒளிந்திருந்த இடம்) என்றும், மாண்டவர் குழி (மாண்டவர்-இறந்தவர்) என்றும், சொல்லுகிறார்கள். பானை இல்லாத குழிகளுக்கு குரங்குப்பட்டடை என்று பெயர் வழங்குகிறது. இராமாயணத்தில் சொல்லியிருக்கும் வானரப்படை சேதுவுக்குப் போனபொழுது தங்கிய இடம் என்று சிலர் சொல்லுகிறார்கள். ஆரணிப்பட்டி, வைத்திக்கோவில், பெருங்களூர், தென்னங்குடி, காரையூர், கீரனூர், மாஞ்சம்விடுதி முதலிய இடங்களில் இவ்விதப்பிணக்குழிகள் காணப்படுகின்றன.

ஆலங்குடி தாலூகாவில் கருக்காகுரிச்சி என்று ஒரு ஊர் இருக்கிறது. இந்த ஊரில் சுமார் 30 வருஷங்களுக்குமுன் 501 ரோமாபுரி நாணயங்களை பூமியிலிருந்து கண்டெடுத்தார்கள். இந்த நாணயங்கள் சுமார் 2,000 வருஷங்களுக்கு முன்

போட்டுத் தண்ணீரை இறைத்தாலும் இக்கிணற்றில் தண்ணீர் வற்ருதாம். இவர்கள் வெட்டிய கிணறுகள் அதிக ஆழமில்லாவிட்டாலும் நல்ல நீர் ஊற்றுடன கூடியவை. தண்ணீர் இருக்கும் இடம் தெரிந்து கிணறு வெட்டுவதில் இவர்கள் வெகு சமர்த்தர்கள். இவர்களுக்கு கார் (மேகம்) காத்த வேளாளர் என்றும் பெயர் உண்டு. பயிர்த் தொழில் செய்ய மழைக்காக காத்திருப்பதால் இப் பெயர் வந்திருக்கலாம்.

வடகிழக்கே செங்கற்பட்டு, வட ஆற்காடு என்ற ஜில்லாக்கள் இருப்பதாக நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். இதற்குத் தொண்டை மண்டலம் என்று பெயர். வெள்ளாளர்கள் முதலில் இந்த இடத்தில் இருந்தவர்கள்.

மதுரையில் பாண்டிய அரசர்களும் திருச்சிராப்பள்ளியில் சோழ அரசர்களும் அந்தக் காலத்தில் அரசாண்டு வந்தார்கள். நம்முடைய சமஸ்தானபடத்தைப் பாருங்கள். அதன் நடுவில் வெள்ளாறு ஓடுகிறது. இந்த ஆறுதான் பாண்டிய நாட்டிற்கும் சோழ நாட்டிற்கும் எல்லையாக இருந்தது. ஆகவே நம்முடைய சமஸ்தானத்தில் வெள்ளாற்றிற்குத் தெற்குபாகம் பாண்டிய நாட்டையும் வடக்குப் பாகம் சோழ நாட்டையும் சேர்ந்திருந்தது.

போட்டுத் தண்ணீரை இறைத்தாலும் இக்கிணற்றில் தண்ணீர் வற்றுதாம். இவர்கள் வெட்டிய கிணறுகள் அதிக ஆழமில்லாவிட்டாலும் நல்ல நீர் ஊற்றுடன கூடியவை. தண்ணீர் இருக்கும் இடம் தெரிந்து கிணறு வெட்டுவதில் இவர்கள் வெகு சமர்த்தர்கள். இவர்களுக்கு கார் (மேகம்) காத்த வேளாளர் என்றும் பெயர் உண்டு. பயிர்த் தொழில் செய்ய மழைக்காக காத்திருப்பதால் இப் பெயர் வந்திருக்கலாம்.

வடகிழக்கே செங்கற்பட்டு, வட ஆற்காடு என்ற ஜில்லாக்கள் இருப்பதாக நீங்கள் கேள்விப் பட்டிருப்பீர்கள். இதற்குத் தொண்டை மண்டலம் என்று பெயர். வெள்ளாளர்கள் முதலில் ந்த இடத்தில் இருந்தவர்கள்.

மதுரையில் பாண்டிய அரசர்களும் திருச்சி ப்பள்ளியில் சோழ அரசர்களும் அந்தக் காலத் ல் அரசாண்டு வந்தார்கள். நம்முடைய சமஸ் ானபடத்தைப் பாருங்கள். அதன் நடுவில் வெள்ளாறு ஓடுகிறது. இந்த ஆறுதான் பாண்டிய நாட்டிற்கும் சோழ நாட்டிற்கும் எல்லையாக இருந் து. ஆகவே நம்முடைய சமஸ்தானத்தில் வள்ளாற்றிற்குத் தெற்குபாகம் பாண்டிய நாட் டையும் வடக்குப் பாகம் சோழ நாட்டையும் சேர்ந் திருந்தது.

பாண்டிய அரசர்களும் சோழ அரசர்களும் தொண்டை மண்டலத்திலிருந்து வெள்ளாளர்களைக் கொண்டுவந்து தங்கள் நாட்டில் குடியேற்றினார்கள். விவசாயம் செய்வதில் வல்லவர்கள் ஆகையால், காட்டை யழித்து பூமியை சாகுபடிக்கு லாயக்குள்ளதாக திருத்துவதற்காக இவர்களை அழைத்திருக்கலாம்.

1. வெள்ளாளர்களைப்பற்றி ஒரு வியாஸம் எழுது.

2. உன் ஸமஸ்தான படத்தில் பாண்டிய நாட்டையும சோழ நாட்டையும் குறி.

பாடம் 3.

மறவர்கள்.

கோனாட்டு வெள்ளாளருக்கும் கானாட்டு வெள்ளாளருக்கும் சண்டை உண்டாயிற்று. கானாட்டார் தோல்வி அடைந்தார்கள். ஆகையால் அவர்கள் ராமநாதபுரம் சமஸ்தானத்தி லிருந்து மறவர்களைக் கொணர்ந்து தன்னாட்டில் குடியேற்றினார்கள். மறவர்கள் தேக வலிமை உள்ளவர்கள். இவர்களுடைய உதவியைக்கொண்டு கானாட்டின் ஒலியூர் (ஒலிய மங்கலம்) கூற்றத்து (கூற்றம்—பிரிவு, Division) கிராமங்களை கொள்ளையிட்டார்கள். ஆகையால் கோனாட்டு வெள்ளாளரும் மறவர்களைத் தங்களுக்கு உதவி செய்வ

பாண்டிய அரசர்களும் சோழ அரசர்களும் தொண்டை மண்டலத்திலிருந்து வெள்ளாளர்களைக் கொண்டுவந்து தங்கள் நாட்டில் குடியேற்றினார்கள். விவசாயம் செய்வதில் வல்லவர்கள் ஆகையால், காட்டை யழித்து பூமியை சாகுபடிக்கு லாயக்குள்ளதாக திருத்துவதற்காக இவர்களை அழைத்திருக்கலாம்.

1. வெள்ளாளர்களைப்பற்றி ஒரு வியாஸம் எழுது.

2. உன் ஸமஸ்தான படத்தில் பாண்டிய நாட்டையும் சோழ நாட்டையும் குறி.

பாடம் 3.

மறவர்கள்.

கோனாட்டு வெள்ளாளருக்கும் கானாட்டு வெள்ளாளருக்கும் சண்டை உண்டாயிற்று. கானாட்டார் தோல்வி அடைந்தார்கள். ஆகையால் அவர்கள் ராமனாதபுரம் ஸம்ஸ்தானத்தி லிருந்து மறவர்களைக் கொணர்ந்து தன்னாட்டில் குடியேற்றினார்கள். மறவர்கள் தேக வலிமை உள்ளவர்கள். இவர்களுடைய உதவியைக்கொண்டு கானாட்டார் ஒலியூர் (ஒலிய மங்கலம்) கூற்றத்து (கூற்றம்—பிரிவு, Division) கிராமங்களை கொள்ளையிட்டார்கள். ஆகையால் கோனாட்டு வெள்ளாளர்களும் மறவர்களைத் தங்களுக்கு உதவி செய்வ

பாடம் 5.

சமணர்கள்.

ஸ்ரீ ஞானசம்பந்தரைப் பற்றிப் படித்திருப்பாய். அவர் மதுரைக்குப் போனது எதற்காக? சமணர்களைக் கழுவிலேற்றிய படலம் என்கிற கதையைப் படி. சுமார் 1400 வருஷங்களுக்கு முன் இந்த சமணர்கள் பாண்டிய நாட்டில் தங்களுக்கு ஏற்பட்ட உபத்திரவத்தைத் தாங்கமாட்டாமல் காடுகளில் ஓடி ஒளிந்தார்கள். நம்முடைய சமஸ்தானம் காடாக இருந்தது என முன்னமேயே படித்திருக்கிறோம். இந்த சமணர்கள் நம்முடைய சமஸ்தானத்தில் பல இடங்களில் வந்து தங்கினதாகத் தெரிகிறது.

தேனிமலையிலும் சித்தன்னவாசல் மலையிலும் இயற்கையாக ஏற்பட்ட மலைப்பிரிவுகள் காணப்படுகின்றன. இவை மலையின் ஒரு பக்கத்தில் இருக்கின்றன. இந்த நீண்ட பிளவுகளை சமண முனிவர்கள் தாங்கள் தங்குவதற்கு தகுந்த இடமாகச் செய்து கொண்டார்கள் போலத் தோன்றுகிறது. படுத்துக்கொள்ளத் தக்கவாறு தலையணை உள்பட பல படுக்கைகள் இவற்றில் செதுக்கப்பட்டிருக்கின்றன. சித்தன்னவாசலி லிருக்கும் இப்பிளவுக்கு ஒரு ஒடுக்கமான வழிமூலம் போக

பாடம் 5.

சமணர்கள்.

நீ ஞானசம்பந்தரைப் பற்றிப் படித்திருப்பாய். அவர் மதுரைக்குப் போனது எதற்காக? சமணர்களைக் கழுவிலேற்றிய படலம் என்கிற கதையைப் படி. சுமார் 1400 வருஷங்களுக்கு முன் இந்த சமணர்கள் பாண்டிய நாட்டில் தங்களுக்கு ஏற்பட்ட உபத்திரவத்தைத் தாங்கமாட்டாமல் காடுகளில் ஓடி ஒளிந்தார்கள். நம்முடைய சமஸ்தானம் காடாக இருந்தது என முன்னமேயே படித்திருக்கிறோம். இந்த சமணர்கள் நம்முடைய சமஸ்தானத்தில் பல இடங்களில் வந்து தங்கினதாகத் தெரிகிறது.

தேனிமலையிலும் சித்தன்னவாசல் மலையிலும் இயற்கையாக ஏற்பட்ட மலைப்பிரிவுகள் காணப்படுகின்றன. இவை மலையின் ஒரு பக்கத்தில் இருக்கின்றன. இந்த நீண்ட பிளவுகளை சமண முனிவர்கள் தாங்கள் தங்குவதற்கு தகுந்த இடமாகச் செய்து கொண்டார்கள் போலத் தோன்றுகிறது. படுத்துக்கொள்ளத் தக்கவாறு தலையணையுள்பட பல படுக்கைகள் இவற்றில் செதுக்கப்பட்டிருக்கின்றன. சித்தன்னவாசலி லிருக்கும் இப்பிளவுக்கு ஒரு ஒடுக்கமான வழிமூலம் போக



சித்தன்னவாசல்—ஏழடிப்பட்டம்.


வேண்டும். கொஞ்சம் தவறினுல் செங்குத்தாயுள்ள அம்மலைச்சரிவில் புரண்டு கீழே விழவேண்டியது தான். அங்கே போவதற்கு ஏழு குழிகள் தோண்டப்பட்டிருக்கின்றன. இவற்றில் காலை வைத்து ஊன்றிப் போகவேண்டும். இதற்கு ஏழடிப் பட்டம் என்று பெயர். இந்தப் பிளவிற்கு அபாயமின்றி போவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் இப்பொழுது செய்யப்பட்டிருக்கின்றன. பிறருடைய உபத்திரவம் இல்லாமல் தபசுசெய்ய இது தகுந்த இடம் என அம்முனிவர்கள் எண்ணியிருப்பார்கள்.

தார்த்தாமலை, செட்டியாப்பட்டி, வெள்ளனூர், அம்மாச்சத்திரம் முதலிய இடங்களிலும் சமண விக்ரகங்கள் (சமணக் கடவுள் சிலை) காணப்படுகின்றன. இந்த சமணர்கள் வரவர குறைந்து போய் இப்பொழுது ஒருவர் கூட நம்முடைய சமஸ்தானத்தில் இல்லை. ஆனுல் சித்தன்னவாசலிலுள்ள சமணர் கோவிலுக்கு தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள சமணர்கள் இப்பொழுதும் வந்து போகிருர்கள்.

1. இப்பாடத்திற் கண்ட ஊர்களை பக்கத்தில் 'சம.,' என்ற எழுத்துக்களுடன் உன் படத்தில் குறி

2. ஏழடிப்பட்டம் என்ருல் என்ன ?

3. சமணர்களைப்பற்றி ஒரு வியாஸம் எழுது.



சித்தன்னவாசல்—மலையைக்குடைந்து கட்டப்பட்ட கோவில்.

பாடம் 6.


பல்லவ அரசர்கள்.

வெள்ளாற்றிற்கு வடக்குப்பாகம் சோழ ராஜாக்களாலும், தெற்குப் பாகம் பாண்டிய அரசர்களாலும் ஆளப்பட்டு வந்தன என முந்தியே படித்தோம். தொண்டை மண்டலம் என்ற நாட்டைப்பற்றியும் தெரிந்து கொண்டோம். அந்தக் காலத்தில் தொண்டை மண்டலத்தை ஆண்டவர்கள் பல்லவ அரசர்கள. இவர்களில் மஹேந்திர வர்மன் என்ற அரசர் மிகவும் கீர்த்தி பெற்றவர். மகா வீரர். இவர் சோழ நாட்டை ஜயித்தார். புதுக்கோட்டையும் இவரின் கீழ் வந்தது. இந்தக் காலத்திற்கு முந்தியெல்லாம் செங்கல்லாலும் மரத்தாலும் கோவில்கள் கட்டுவது வழக்கம். இவர் காலம் முதல் மலையைக் குடைந்து கோவில்கள் கட்ட ஆரம்பித்தார்கள். இவ்வித கோவில்கள் நம்முடைய சமஸ்தானத்தில் திருக்கோகர்ணம், திருமயம், குடுமியாமலை, குன்றுண்டார்கோவில், மலையடிப்பட்டி, நார்த்தாமலை, மலையக் கோவில், சித்தன்னவாசல், கோட்டையூர் முதலிய இடங்களில் காணலாம். படத்தில் சித்தன்னவாசல் கோவிலைப் பார். உன் ஊர்ப்பக்கத்தில் மலையைக் குடைந்த கோவில் இருந்தால், அதை நன்றாய்க் கவனித்துப்பார். அதுபோல் ஒருபடம் வரை.

கொஞ்ச காலத்திற்குப் பின் மலையைக் குடைந்து கோவில்கள் கட்டுவது நின்றுவிட்டது. தனியாக கற்பாறைகளால் கோவில்கள் கட்ட ஆரம்பித்தார்கள். கொடும்பாளூர் மூவர் கோவிலைப் பார்த்திருப்பாய்.

பல்லவ அரசர்கள் தென்னாடு எல்லாம் ஆண்டபொழுது தங்களுக்கு வரவேண்டிய வரிகளை வசூலிப்பதற்காக அரையர்கள் என்ற பிரதிநிதிகளை ஏற்படுத்தி யிருந்தார்கள். இவர்கள் வர வர பலமுள்ளவர்களாக ஆய்விட்டார்கள். சிலர் வரிகளை வசூலித்து மேலே அனுப்பாமல் தாங்களே வைத்துக்கொண்டுத் தங்களை அரசர்களாக பாவித்துக் கொண்டார்கள்.

இவ்வித அரையர்களில் பல்லவராயர் என்ற பெயருடன் பல அரையர்கள் புதுக்கோட்டை சீமையில் இருந்தார்கள். இவர்களில் ஒருவர் 600 வருஷங்களுக்கு முன் வைத்தூரில் தங்கினார். இவர் கொஞ்சம் கொஞ்சமாக தன் பூமியை அதிகப்படுத்தினார். இந்த வம்சத்தில் வந்த கடைசி இரண்டு அரையர்கள் தங்களை அரசர்களாகவே எண்ணினார்கள். இவர்களுடைய இராஜ்யம் ஆதனக்கோட்டையிலிருந்து கவிநாடு வரையிலும், குளவாய்ப்பட்டிச் சத்திரம் முதல் குடுமியாமலை வரையிலும் பரவியிருந்தது. கடைசி பல்லவரா



குன்றாண்டார் கோவில்—கல் ரதம்.

யருக்கு சிவந்தெழுந்த பல்லவராயர் என்று பெ
பல்லவன் குளம் என்றிருப்பதை கவனி. நவர
த்திரியின் பொழுது அரிசி போடுவதற்கு உபயோ
கும் பல்லவன் படியை நீ பார்த்திருக்கிறாய
இவை பல்லவராயர்களால் ஏற்படுத்தப்பட்டவை

1. கோவில்கள் என்ன என்ன விதங்களாக கட்ட
பட்டன ?

2. அரையர்களைப்பற்றி ஒரு வியாஸம் எழுது ?

3. கடைசி பல்லவ அரசர் ஆண்ட இராஜ்யத்தை
படத்தில் குறி.

பாடம் 7.

தொண்டைமான் வம்சம்.

வெகுகாலத்திற்கு முன் பாண்டிய அரசரி
நாட்டை சேதுபதி பிடுங்கிக்கொண்டார். அ
பொழுது இந்நாடுகள் எல்லாம் தொண்டைமண்
டலம் அரசர்களின் கீழ் இருந்தன. பாண்டிய அ
சர் தொண்டைமண்டலம் சென்று 7-வருஷங்க
காத்திருந்து வேங்கிடாசலம் பல்லவராயர் என்
ஒருவரை அழைத்துவந்தார். அவரின் உதவியா
சேதுபதி பிடுங்கி கொண்ட தன் நாட்டை
பாண்டிய அரசர் திரும்பவும் அடைந்தார். இத
காக பொன்னமராவதி பக்கத்தில் பல ஊர்களை
பல்லவராயருக்குப் பரிசாக அளித்தார். இப்ப

லவராயருடன் தொண்டைமான் சக்கரவர்த்தி யென ஒருவர் வந்திருந்தார். அவர் செய்த உதவிக்காக அவருக்கு அம்புகோவிலின் அருகில் பல ஊர்கள் கொடுக்கப்பட்டன. இந்தத் தொண்டைமான் வம்சத்தில் தோன்றியவர்களே இப்பொழுது நம்மை ஆளும் அரசர்.

இவர்களும் தொண்டைமண்டலமிருந்துவந்தவர்களே. இவர்கள் யானைகளைப் பிடித்துப் பழக்குவதில் வெகு சமர்த்தர். இந்தக் காலத்தில் சோழ, பாண்டிய தேசங்கள் எல்லாம் விஜயநகர ராஜாவின் கீழ் இருந்தது. இந்த விஜயநகர ராஜாக்களில் கிருஷ்ணதேவராயர் என்பவரைப் பற்றி நீங்கள் படித்திருப்பீர்கள். ஸ்ரீரேங்க ராயலு என்ற ஒரு அரசர் இருந்தார். அவர் ஒரு தடவை ராமேச்வரத்திற்கு அம்புநாட்டின் வழியாகச் சென்றார். அப்பொழுது அவருடைய யானை ஒன்றுக்கு மதம் பிடித்தது. அது அதிக சேதத்தை விளைவிக்கும் போல் இருந்தது. கரம்பக்குடியிலிருந்த ஆவடை ரகுநாத தொண்டைமான் என்பவர் அந்த யானையை வெகு சாமர்த்தியமாகப் பிடித்து அரசரிடம் சேர்ப்பித்தார். அரசரும் மகிழ்ச்சிகொண்டு தொண்டைமானுக்கு 'ராய' (ராஜ) என்ற பட்டத்தைச் சூட்டி, நிலங்களும், யானை, பல்லக்கு முதலிய பல விருது

களும் கொடுத்தார். அதுமுதல் இவருக்கு ராய தொண்டைமான் என்ற பெயர் வழங்கலாயிற்று.

இவருக்கு நான்கு குமாரர்கள் உண்டு. இவர்கள் நல்ல பலசாலிகள். தகப்பனருக்குப் பின் மூத்த குமாரராகிய ரகுநாதராய தொண்டைமான் பிலாவிடுதியில் வாழ்ந்து வந்தார். இவர்களுடைய பராக்கிரமத்தைக்கேள்விப்பட்டு தஞ்சாவூர் அரசர் அங்கு தன் குடிகளுக்கு உபத்திரவம் செய்து கொண்டிருந்த கள்ளர்களை அடக்கும் வேலையில் இவரை அமர்த்தினர். அப்பொழுது தஞ்சாவூர் ராஜாவால் பரிசாக கொடுக்கப்பட்ட "பெரிய ராம பாணம்' என்ற கத்தியை இப்பொழுதும் அரண்மனையில் பார்க்கலாம். இது நவராத்திரியில் வெளியில் எடுக்கப்படுகிறது.

ரகுநாதராய தொண்டைமான் அப்பொழுது திருச்சிராப்பள்ளியை ஆண்ட ராஜாவுக்கும் உதவி புரிந்து புகழ்பெற்றார். இந்தக் காலத்தில் ராமநாத புரத்தில் கிழவன் சேதுபதி என்பவர் அரசாண்டார். இவர் தொண்டைமானின் பலத்தைக் கேள்விப்பட்டு, அவருடைய உதவியால், தனக்கு விரோதமாகக் கிளம்பின பாளையக்காரர்களை வென்றார். இந்தக் காலத்தில்தான் சிவந்தெழுந்த பல்லவராயர் நம்மூரில் அரசாண்டது. இவர் சேதுபதியை அவமரியாதை செய்தாரென்று

இவரைப் பிடிக்கச் செய்ததில் பல்லவராயர் இறந்தார். இவர் ஆண்டுவந்த இராஜ்யம் சேதுபதியால் ரகுநாதராயத் தொண்டைமானுக்குக் கொடுக்கப்பட்டது.

இக்காலத்தில் சேதுபதியால் கொடுக்கப்பட்ட கத்திக்கு 'சின்ன ராமபாணம்,' என்று பெயர். இதுவும் இப்பொழுது அரண்மனையில் இருக்கிறது. இது சுமார் 250 வருஷங்களுக்கு முன் நடந்தது. இதுமுதல் தொண்டைமான் வம்சத்தார் புதுக்கோட்டையின் அரசர் ஆனார்கள்.

1. சேதுபதி என்பவர் யார்?

2. ராயதொண்டைமான் என ஏன் பெயர் வந்தது?

3. புதுக்கோட்டை ராஜ்யம் பல்லவராயர்களிடம் இருந்து தொண்டைமான் வம்சத்தாருக்கு எவ்விதம் வந்தது?

பாடம் 8.

குளத்தூர் பாளையம்.

ரகுநாதராய தொண்டைமானின் தம்பியாகிய நமனத் தொண்டைமான், நாயக்கர் அரசர்களுக்கு விரோதமாகக் கிளம்பிய பாளையக்காரர்களை அடக்கினார். அதற்கு குளத்தூர் சமீபத்தில் சில நிலங்களைப் பரிசாக அடைந்தார். அதில் இவர் தனியாக ஒரு அரசை ஏற்படுத்தினார். இரண்டு தொண்டைமான்களுக்கும் திருச்சிராப்பள்ளியில் செல்வாக்கு உயர்ந்தது. இவர்களுக்குப் 'பெரிய

தொண்டைமான்', சின்னத் தொண்டைமான்' எனப் பெயர் வழங்கிற்று.

ஜனங்களை இம்சித்த வீசங்கு நாட்டுக் கள்ளர்களை நமனத்தொண்டைமான் புலியூரில் தோற்கடித்தார். இவர் நாயக்கர் அரசருக்குச் செய்த உதவியால் இப்பொழுதுள்ள குளத்தூர் தாலூகா முழுவதும் கொஞ்சம் கொஞ்சமாக பரிசாகப்பெற்றார். இந்தக் காலத்தில் குளத்தூர் சீமை தனியாக ஆளப்பட்டு வந்தது. பின்னல் புதுக்கோட்டைத் தொண்டைமானுடைய செல்வாக்கு அதிகமாக ஆயிற்று. சுமார் 200 வருஷங்களுக்கு மூன் குளத்தூர் சீமை புதுக்கோட்டை இராஜ்யத்துடன் சேர்ந்துவிட்டது.

1. நமனத்தொண்டைமான் இராஜ்யத்தை படத்தில் குறி.

பாடம் 9.

தென்னிந்திய சரித்திரம்.

இந்பொழுது தென்னிந்தியாவில் முகமதியர் ஆளுகை வலுத்தது. டில்லியில் பாதுஷா என்ற முகமதிய சக்ரவர்த்தி அரசாண்டு வந்தார். பாதுஷாவின் பிரதிநிதியாக தென்னிந்தியாவை கர்நாடக நவாப் ஆண்டுவந்தார். இவர் இறந்து போனவுடன் இப்பதவிக்கு இருவர் போட்டி

போட்டார்கள். இதில் ஒருவர் இறந்துபோன நவாபின் புத்திரரான முகமது அலி.

இந்த சமயத்தில் ஆங்கிலேயர்களும் பிரஞ்சுக்காரர்களும் தென்னிந்தியாவில் வியாபாரம் செய்து வந்தார்கள். இவர்களுக்குள் வியாபாரப் போட்டி அதிகமாயிற்று. ஒவ்வொருவரும் ஒரு கக்ஷியில் சேர்ந்துகொண்டு தங்கள் செல்வாக்கை அதிகப்படுத்தப் பார்த்தார்கள். ஆங்கிலேயர் முகமது அலிக்கு உதவி செய்தார். இக்காலத்தில் புதுக்கோட்டையில் அரசாண்டது விஜய ரகுநாத ராய தொண்டைமான். இவரும் முகமது அலிக்கு உதவி புரிந்தார். இதிலிருந்து தொண்டைமான் அரசர்களுக்கும் ஆங்கிலேயருக்கும் சினேகம் அதிகரித்தது. முகமது அலி கக்ஷி ஜயமடைந்தது. தொண்டைமான் இன்னும் பலதடவைகளில் ஆங்கிலேயருக்கும் நவாபுக்கும் உதவிபுரிந்தார். இந்த உதவிகளுக்காக தமக்குக் கப்பம்கட்ட வேண்டியதில்லை என முகமது அலி உத்திரவு செய்தார். பிறகு முகமதிய இராஜ்யம் ஆங்கிலேய அரசாக்ஷிக்குக் கீழ் வந்தபொழுதும் நமது சமஸ்தானம் மற்ற சமஸ்தானங்களைப்போல இந்தியா கவர்ன்மெண்டுக்கு கப்பம் கட்டுவது கிடையாது.

பாடம் 10

விஜயரகுநாதராய தோண்டைமான்.

முன் பாடத்தில் படித்த விஜயரகுநாதராய தொண்டைமான் ஞானமார்க்கத்தில் அபிமானம் உள்ளவர். டவுனுக்கடுத்த சிவஞானபுரம் என்ற ஊரில் ஒரு அரண்மனை கட்டிக்கொண்டு அங்கேயே இவர் தவம் புரிந்து வந்தார். ஆகையால் இவரை சிவஞானபுரம் துரை என்பார்கள். இவர் சதாசிவ பிரமேந்திர ஸ்வாமிகள் என்ற மௌன ஸ்வாமிகளின் அனுக்ரகம் பெற்ருர். இந்த ஸ்வாமிகள் தொண்டைமானுக்கு மணலில் மந்திரத்தை எழுதி உபதேசம் செய்தார். இம்மணலை இப்பொழுதும் அரண்மனையில் பூஜையில் வைத்திருக்கிருர்கள். பால்யத்தில் இந்த ஸ்வாமிகளுடன் மகா பாஷியம் கோபால கிருஷ்ண சாஸ்திரியார் என்று ஒருவர் படித்து வந்தார். ஸ்வாமிகளின் உத்திரவுப்படி ராஜா சாஸ்திரியாரை தனக்கு ஞானகுருவாகக் கொண்டு அவரிடம் வேதாந்தம் கற்ருர். கானப்பேட்டை, பின்னங்குடி, நம்மன சமுத்திரத்தில் கொஞ்சம், இவை இவருக்கு சர்வ மானியமாக விடப்பட்டன. நம்முடைய தலைநகரில் வருஷா வருஷம் நடக்கும் நவராத்திரி உற்சவமும் இப்பொழுதுதான் ஏற்பட்டது. நவராத்திரி

யில் கொடுக்கப்படும் அம்மன் காசும் இப்பொழுது ஏற்பட்டதே.

சதாசிவ பிரமேந்திர ஸ்வாமிகள் கரூருக்கு அடுத்த நெரூரில் சமாதி அடைந்தார். அங்கே அவருக்கு சமாதி கட்டியிருக்கிறார்கள். பூஜை நடப்பதற்காகக் கிராமங்களும் விடப்பட்டன.

சிவஞானபுரம் துரை ராஜா பல தானதருமங்களைச் செய்து சத்திரங்களும் கட்டினார்.

1. சிவஞானபுரம் துரையைப்பற்றி உனக்குத் தெரிந்ததை எழுது.

2. சதாசிவ பிரமேந்திர ஸ்வாமிகளைப்பற்றி ஒரு வியாஸம் எழுது.


3 ஸர்வமானியம் என்றால் என்ன ?

4. நவராத்திரி உற்சவத்தைப்பற்றி ஒரு வியாஸம் எழுது.

பாடம் 11.

பாளையக்காரர்கள்.

இந்தக் காலத்தில் தென்னிந்தியாவில் அடிக்கடி சண்டைகள் நடந்தன. மைஸூர் ராஜ்யம் என்பதை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். இதை அப்பொழுது ஆண்டுவந்தவர் ஐதர் அலி என்ற ஒரு சுல்தான். இவர் சோழநாட்டின் மேல் படையெடுத்து வந்தார். அப்பொழுது சோழநாடு ஆங்கிலேயரின் ஆதீனத்தைச் சேர்ந்த



திருமயம் கோட்டை.

நவாபின் கீழ் இருந்தது. தென்னிந்தியாவில், உடையார் பாளையம், இராமநாதபுரம், சிவகங்கை முதலிய பல பாளையப்பட்டுக்கள் இருந்தன. இவர்கள் ஐதரை ஆதரித்தார்கள். ஆனால் ஆங்கிலேயரும் தொண்டைமானும் நவாபுக்குச் சகாயம் செய்தார்கள்.

பாஞ்சாலங்குரிச்சி கட்டபொம்ம நாயக்கர் என்ன, அவர் தம்பியாகிய மகா தீரனான ஊமையன் என்ன இவர்களைப் பிடிப்பதிலும் உதவியாயிருந்து பல பரிசுகளைப் பெற்றார். பாளயக்காரர்கள் அடங்கவே, ஆங்கில ஆக்ஷி வலுத்தது.

தஞ்சாவூர் ராஜாவிற்கும் ராமனாதபுரம் ராஜாவிற்கும் அடிக்கடி யுத்தம் நடக்கும். இவ்விருவர்களுடைய இராஜ்யங்களும் சந்திக்கிற இடத்தில் கீழாநிலை இருப்பதைப் பாருங்கள். ஆகையால் இவ்வூர் சிலசமயம் தஞ்சாவூரையும் சிலசமயம் ராமனாதபுரத்தையும் சேரும். இந்த யுத்தங்களில் நம்முடைய இராஜாசெய்த உதவிக்காக ஒருசமயம் கீழாநிலை நம்மைச் சேர்ந்தது ஆயிற்று. ஆயினும் தஞ்சையரசர் அவ்வூருக்குப் பாத்தியங் கொண்டாடினார். பாளையக்காரர்கள் சண்டையில் நாம் செய்த உதவிக்காக ஆங்கிலேயர் இதை நமக்கே கொடுத்துவிட்டார். சென்ற 125 வரு

ஷங்களாக கீழாநிலை புதுக்கோட்டையின் ஒரு பாகம் ஆயிற்று.

1. தஞ்சாவூர் ஜில்லா, இராமநாதபுரம் ஜமீன், கீழாநிலை இவைகளைக் காட்டி ஒரு படம் போடு.

பாடம் 12.

தொண்டைமான் அரசர்கள்.

தொண்டைமான் அரசர்கள் தெய்வ பக்தி உள்ளவர்கள். தரும சீலர்கள். குடிகளிடத்தில் அன்பு மிகுந்தவர்கள். பிராம்மணர்கள் அனேகருக்கு சர்வமானியம் கொடுத்து இராஜ்யத்தில் குடியேறச் செய்தார்கள். பல இடங்களில் சத்திரங்கள் கட்டினார்கள். வெளியூர்களின் கோவில் பூஜைக்காக கட்டளைகள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இதற்கு தொண்டைமான் கட்டளை என்று பெயர். இவர்கள், சமயத்திற்கு தகுந்தபடி மாறாமல், ஆங்கிலேயர்களிடம் விசுவாசம் காட்டி வந்தார்கள். ஆகையால் இந்த இராஜ்யத்திற்கு, சுமார் 100 வருஷங்களுக்கு முன், பூரண சுதந்திரம் கிடைத்தது. அதாவது பிரிட்டிஷ் ராஜாங்கத்திற்குக் கப்பம் கட்டாமல் தன் இஷ்டப்படி இராஜ்யத்தை ஆளலாம்.

1836-ம் வருஷத்தில் இந்த ராஜ்யத்தை ஆண்டு வந்தவர் 'ராஜா ரகுநாத தொண்டைமான்

பகதூர்' இவருக்கு ஹிஸ் எக்ஸலன்ஸி என்ற பட்டம் ஆங்கிலேயரிட மிருந்து கிடைத்தது.

இவருக்குப் பிறகு இவருடைய குமாரரான "ராஜா ராமச்சந்திர தோண்டைமான் பகதூர்" அரசரானர். இவர் காலத்தில் ஹிஸ் எக்ஸலன்ஸி என்ற பட்டம் 'ஹிஸ் ஹைனஸ்' என உயர்ந்தது. திருச்சி அல்லது சென்னைக்குப் போகும்பொழுதெல்லாம் 11 குண்டுகள் போடும் மரியாதையையும் பெற்ருர்.

இவர் காலத்தில்தான் ராஜ தந்திர நிபுணரான ஸ்ரீமான் ஸர் சேஷய்யா சாஸ்திரிகள் இந்த இராஜ்யத்திற்கு திவாஞக வந்தார்.

பாடம் 13.

நமது மகாராஜா.

ராஜா ராமச் சந்திர தொண்டைமாஞருக்கு சந்ததி யில்லாததால் பெண்வயிற்றுப் பிள்ளையை ஸ்வீகாரம் செய்துகொண்டார். இவர் 'ராஜாமார்த்தாண்ட பைரவ தொண்டைமான்' என்ற பெயருடன் 1886-ம் வருஷத்தில் அரசரானர். இவருடைய இளமைப் பருவத்தில் ஸ்ரீமான் சேஷய்யா சாஸ்திரியாரே திவான் ரீஜன்டாக இருந்து இராஜ்ய பரிபாலனம் செய்துவந்தார். இவர் நம் ராஜயத்திற்கு செய்த சீர்திருத்தங்கள் பல.

புதுக்குளம் இவர் காலத்தில் வெட்டப்ப டது. காலேஜ், கச்சேரிக் கட்டிடங்கள், வைத்தி சாலை இவைகள் கட்டப்பட்டன. புதுக்கோட்டை டவுனையே அலங்காரமாக இருக்கும்படி செய்தார் நல்ல சாலைகள் போடப்பட்டன. நிலத் தீர்வைகள் ஒழுங்காகச் செய்யப்பட்டன. சமஸ்தான வருமா னம் அதிகமாயிற்று.

ராஜா மார்த்தாண்ட பைரவதொண்டைமான் பட்டத்திற்குவந்து 25-வருஷ காலமானதை 1913-ம் வருஷத்தில் வெள்ளி ஜூபிலி என்று ஜனங்கள் எல்லாரும் கொண்டாடினார்கள். அப் பொழுது நீங்கள் பிறந்திருக்கமாட்டீர்கள். அந்த காலத்தில் ஜனங்களிடம் காணப்பட்ட சந்தோ ஷம் அளவு இல்லாதது.

ஐரோப்பாவில் ஒரு பெரிய யுத்தம் சுமார் 10 வருஷங்களுக்கு முன் நடந்தது. அதிலும் இந்த மகாராஜா ஆங்கிலேய மன்னருக்கு வேண் டிய உதவிகளைச் செய்தார்.

இவர் சீமையில் வசித்ததால் இவருக்குப் பதிலாக நம்மை ரீஜென்டாக இருந்து ஆண்டு வந்த மகா-ா-ா-ஸ்ரீ விஜயரகுநாத துரைராஜா அவர் கள் நம்மூரில் பிறந்து வளர்ந்தவர். பலகாலம் கவுன்ஸிலர் பதவியிலும் திவான் பதவியிலுமிரு

ந்து அனுபோகம் பெற்றவர். நம்மை நன்கு யறிந்தவர். சமஸ்தானம் முழுவதும் சுற்றி நம் முடைய குறைகளை நேரில் அறிந்து அவைகளை நிவர்த்திக்க முயன்றார். நகரபரிபாலன சங்கத் தில் ஜனப்பிரதிநிதிகளை அதிகமாக்கினார். ஜனப் பிரதிநிதி சபையாக முந்தி யிருந்ததை சட்ட நிர் மாண சபையாக மாற்றியதும் இவரே. சமீபத் தில் ஏற்படுத்தப்பட்ட தீனர்களின் விடுதி (Poor House), ஏழைகள்மீது இவருக்கு உள்ள கருணை யைக் காட்டுகிறதல்லவா?

28-5-28ல் ராஜா மார்த்தாண்ட பைரவ தொண்டைமானர் காலமானார். இவருடைய அகாலமரணத்தைக் கேட்டு வருந்ாதவர்கள் ஒருவருமில்லை.

இவருக்குப்பின் தொண்டைமான் வம்சத் தைச் சேர்ந்தவரும் மேலரண்மனை ஜாகீர்தாரு மான ராஜா ராஜகோபாலத் தொண்டைமானர் அரசராயிருக்கிறார். இவர் இளம்பிராயத்தினர். ஆகையால் இவருக்குப் பதிலாக ஏற்பட்டிருக்கும் அரசாங்க நிர்வாக சபை இப்பொழுது அர சாக்ஷியை நடத்திவருகிறது.

நமது மகாராஜாவும் அவரின்கீழ் ராஜ்ய பாரம் வகிப்போரும் பிரஜைகளும் அரோக திட

காத்திரர்களாய்ப் பல்லாண்டு வாழுமாறு எல்லாம் வல்ல இறைவனைத் துதிப்போமாக.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!

சுபமஸ்து.

PRINTED AT THE B. N. PRESS, MADRAS.

I have with pleasure perused through the little olume of 'Pudukota state Geography', written by Mr. K. R. Venkatarama Aiyer the Inspector of schools, ıdukotah.

Ie has comprised within this little book the three d subjects of Geography-civics and History and has ented them briefly but in a clear and able manner. language is very simple... The influence of the oundings on human life as how the sun, the air, the er and the earth work upon the habits and customs nen, is treated in the 1st. chapter and the author has ken pains to utilise the observing powers of the pupils his direction. The interpretation of the map is r fundemental notion that should be imparted for t kind of study of geography. This is also ably the author.

s very pleasing to note that the author has made e necessaries of life namely food clothing and the main spring of different activities of human the home surroundings of the little state of otah.

astly the old dry method of enumerating the ts the exports and imports, the towns and their ance without any casual connection is being given y the author and the natural up-to-date method of oning them where there is a necessity for them is g strictly followed.

To interest the pupils and make the book attractive ient care is taken by the author with regard to ing illustration and get up of the book.

wish that the author would take up more of such of work to advance the cause of Elementary Education and work it up to a high state of efficiency in the tate of Pudukotah.

(Sd). B. NARAYANASWAMY AIYER, B.A.L.T.

umbakonam. *1st Assistant,*

22-5-28. *Town High School, Kumbakonam.*

பிரதிகள் கிடைக்குமிடம்:

பேராசிரியர் *S. சுந்தரராஜன்*, M. A., M. LITT.,

1, கோகலே ரோடு,

தல்லாகுளம், மதுரை.

Vijaya Printers (Private) Ltd. Maduai.